விளம்பர விகிதங்களுக்கு:
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 44-ம் இலக்கம்

## பாடசாலைப் பிரச்சினைபற்றி யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர்

# தமது ஞான மக்களுக்கு விடுக்கும் நிருபம்

மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.
7-11-60

அன்பான குருப்பிரசாதிகளே! யேசுக்கிறிஸ்துநாதரில் எமக்குமிகவும் அருமையான பிள்ளைகளே!

எமது கத்தோலிக்க வாழ்க்கையைப் பயங்கரமான பேராபத்து ஒன்று பயமுறுத்தி நிற்கின்றது. கடந்த பல நூற்றுண்டுகளில் எமக்கு நேர்ந்த தீமைகளில் இதுவே மாபெரும் தீமை எனலாம். திருச்சபை தனது மக்களுடைய கல்வியையும்,பயிற்சியையும் இனிமேல் பராமரிக்கமுடியாத முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புதுச் சட்டங்களையே நாம் குறிப்பிடுகிறோம்.

உங்கள் கரிசனைபற்றுதலாலும், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரின் தியாகத்தாலும் எமது சிறுருக்கென நிறுவப்பெற்ற தாபனங்கள் யாவும் இப்புதிய சட்டங்களைக் கடவுளின் விசேஷ கருணை தடைசெய்தாலன்றி, பறிக்கப்பட்டுவிடும். இது பெரும் தீங்காயிருப்பதுடன், அநீதியாயு மிருக்கின்றது.

இத்தருணத்தில், கிறிஸ்துநாதரில் உங்கள் தந்தையாயிருக்கிற நாம் பின்வரும் ஆலோசனைகளை உங்களுக்குக் கூற விரும்புகின்றோம்:

முதலாவதாக, கிறிஸ்துநாதரைப் பின்பற்றுமொருவன் தனது கிறிஸ்தவ சீவியத்தினதும்,திருப்பணியினதும் பூலோகவெற்றிகளை மட்டும் அல்ல, எமது ஆண்டவர் எமக்குச் சிலுவையில் காட்டியது போல் தோல்விகளையுமே உண்மைவெற்றிகளாகக் கருதவேண்டுமென்பதை என்றும் உங்கள் மனதில் இருத்துங்கள். எனவே, எமது துன்பங்களைக் கிறிஸ்தவ உறுதியுடன் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்போம்; அவைகளைச் செபமும், பரித்தியாகமுமாகக் கொள்வோம்; இங்ஙனம், எமது ஆண்டவரைப் பின்பற்றி, எமக்குத்தேவையான தேவ வரங்களை நிறைவாக அடைந்துகொள்வோம்.

இரண்டாவதாக, தேவாதீனத்திற்கு எங்களைப் பூரணமாய்க் கையளித்து எமதுபிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும், எமக்கு அவசியமான மதசுதந்திரத்திற்காகவும் இடைவிடாமல் வேண்டுதல்கள் செய்வோம். அடிக்கடி திருப்பூசைப்பலியிற்பங்குபற்றுங்கள். குடும்ப செபமாலைப் பத்தி முயற்சியைப் பிரமாணிக்கமாய் அனுசரியுங்கள்; இந்த நல்ல பழக்கத்தைக் கைவிட்டிருந்தால் திரும்பவும் அதைத் தொடர்ந்து அனுசரியுங்கள்; நாள்தோறும் "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற செபத்தையும் சொல்லிவாருங்கள்.

அர்ச்.சூசையப்பர் மட்டிலுள்ள பத்தியை விருத்திபண்ணி, சிறப்பாகப் புதன்கிழமைகளில் திவ்விய பூசைப்பலியில் பங்கெடுத்தும், அவருக்கு விசேஷ செபங்களை ஒப்புக்கொடுத்தும் அங்நாளைப் புனிதப்படுத்துங்கள். இப்பேராபத்து வேளையில் சருவேசுரனுடைய விசேஷ சகாயத்தை அடைவதற்கு உபவாசமும், தானதருமஞ்செய்தலும் சிறப்பான வழிகளாகும்.

விசாரணைப் பங்குகளில் வாரந்தோறும் திவ்வியநற்கருணை நாதரின்முன் திருமணித்தியால ஆராதனை நடாத்தப்படவேண்டுமென்று விரும்புகின்றோம். இப்பத்தி முயற்சியின்போது, முன்னொருநாள் கடலில் அமிழ்ந்திப்போகும் ஆபத்திலிருந்த படகில் கிறிஸ்துநாதர் இருந்ததுபோல, அவர் எங்களோடும் இருந்து இந்தப் புயலின் மத்தியில் எங்கட்கு அமைதியையும், சாந்தியையும்

[தொடர்ச்சி 4-ம் பக்கம்]

## சம்பத்திரிசியார் கல்லூரிப் பரிசளிப்பு விழாவும்

# பாடசாலைப் பிரச்சினையும்

### 1. இந்தியாவின் முன்மாதிரிகையைப் புறக்கணிக்காதீர்கள்!

"அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பது பெற்றோர் தாம் விரும்பிய பாடசாலையில் தமது பிள்ளைகளைப் பயிற்றும் அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும்."

இவ்வாறு பங்களூர் அதிமேற்றிராணியார் மகாவந். தோமஸ் பொத்தகமுறி ஆண்டவர் அவர்கள் கடந்த 30-10-60 திங்கட்கிழமை சம்பத்திரிசியார் கல்லூரிப் 'பரிசளிப்பு விழாவில் பேசியபோது கூறினர், அவர் மேலும் கூறியதாவது: "மத அடிப்படையிலோ, மொழி அடிப்படையிலோ சிறுபான்மையான மக்கள் தாம்விரும்பியபடி பாடசாலைகளை அமைக்க, தாம்விரும்பிய பாடசாலைகளில் கல்விகற்க இந்திய அரசியல்சட்டம் இடமளித்துள்ளது (No. 30, see 1, 2) மேலும். அச்சட்டம் இப்படிப்பட்ட பாடசாலைகளுக்கு அரசாங்கம் பாரபட்சமின்றி நிதிஉதவி செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது. இச்சட்டத்தை இலங்கை மக்களும் படித்து, பெருமைப்படவேண்டியதே. இந்தியாவின் முன்மாதிரிகையை இலங்கையும் பின்பற்றுவதே சிறந்தது. தொடர்ந்து அவர்பேசுகையில்— "கல்வியிலிருந்து சமயத்தைப் பிரித்துவிட்டால், மனிதனது இயற்கைச் சுபாவமே பாதிக்கப்படுகிறது. இயற்கைச்சுபாவம் எப்படிப் பாதிக்கப்படுகிறதோ அப்படியே ஒழுக்கமும் பாதிக்கப்படுகிறது. சமயக்கல்வி அற்ற கல்விப்போதனையினுல் லௌகீக கல்வியுமே பாதிக்கப்படுகிறது. இலங்கையும் இந்தியாவும் பண்டுதொட்டுச் சமயப் பற்றுடையநாடுகள். அம்மக்கள் மரணத்தின்பின் வேறு ஒரு வாழ்வுண்டு என்பதை விசுவசிப்பவர்கள். 'அப்படியிருக்க இலங்கைமக்கள் அரசாங்கம் கல்வியில் ஏகபோகஉரிமை பெறுவதை எப்படி ஏற்கமுடியும் என்று நான் ஆச்சரியப்படுகிறேன்", என்றுகுறிப்பிட்டார்.

### 2. மனிதனுடைய அடிப்படை உரிமை,

"மனிதன் பகுத்தறிவும் புத்தி சுயாதீனமும் உடையவனுதலால் கடவுளால் அவனுக்குச் சில உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தஉரிமைகளைப் பலாத்காரத்தினுல் பறிக்கலாமேயன்றி உலகில் எந்தமனிதனுலும் அதை அழிக்கமுடியாது." இவ்வாறு சம் சம்பத்திரிசியார் கல்லூரிப் பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைதாங்கிய யாழ்ப்பாண மேற்றிராணியார் வண. ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரவர்கள் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் "இலங்கைமக்கள் அரசாங்கம் பாடசாலைகளை எடுத்து நடத்த வேண்டும் என்பதை விரும்பினுர்கள் என்றஎண்ணம் தப்பானது. இலங்கையில் எத்தனைபேர் சென் யோண்ஸ் கல்லூரியையோ, அன்றேல் சைவமகளிர் கல்லூரியையோ அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று விரும்புவர்? அரசாங்கம் பாடசாலைகளைக் கட்டித்தரவேண்டும்என்று சிலர் விரும்பலாம். அத்தகைய மக்களுக்கு அவர்கள் விரும்பிய பாடசாலைகளை அரசாங்கம் கட்டிக்கொடுக்கட்டும். அதற்கு எவ்வித தடையுமில்லை. ஆனுல், குறிப்பிட்ட ஒரு சிறுபான்மையினரை அழிக்கவேண்டும் என்றஎண்ணம் உடையவரே அரசாங்கத்தின் தேசியமயக் கொள்கையை ஆதரிப்பர். வேறு எவரும் அதைவிரும்பவில்லை" என்று கூறினுர்.

(அடுத்தபக்கம் பார்க்க)

## பள்ளிகள் பறிபோகுதே!

("மண்ணுக்கு மரம் பாரமா" என்ற மெட்டு)

பல்லவி

பள்ளிகள் பறி போகுதே,
மதத்துக்குத் தடையாகுதே,
கலைக்குக் கேடாகுதே — கற்றறிந்தோர்
மயக்கம் கொள்ளலாகுமா.

சரணம்

வாடியே பள்ளிபல வருந்தி வருந்திக் கட்டிவைத்து,
தேடியே நாம்கண்ட செல்வமே பாழாக,
கல்வி, கல்வி என்று, மதமதனைப் பிரித்துவைத்து,
காயதனைக் கனிஎன்று, கண்ணிழந்து சொல்பவரே — (கலைக்கு)
மதத்தால் அன்புயரும்,
அன்புயர்ந்தால் நெறி வளரும்,
படிப்பால் பண்பு வரும்,
வையகத்தில் வாழ் வொளிரும்.
கல்வியைக் கற்றுவிட்டாற் போதுமா,
கடவுள் தொழுதல்வேணும் தெரியுமா?
நாடு அழிய இந்த இயக்கமா — மனசு
பாவ[illegible] இன்னும் தயக்கமா — (பள்ளிகள்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியருக்குக் கடிதம்

**குறிப்பு:** இப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும் கடிதங்களுக்கு அவற்றைஎழுதியவர்களே பொறுப்பாளிகளாவர். ஆசிரியருக்குக் கடிதம்எழுத விரும்பும் வாசகநேயர்கள் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாய் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

— ஆசிரியர்

## நம் கத்தோலிக்க பாடசாலைகளைப் பாதுகாக்கவேண்டும்

ஐயா,

கத்தோலிக்கர் எனும் பெயரைக் கேட்டவுடனேயே கருநாகம்போற் சீறுகிறார்கள் மதஎதிரிகள். அதற்காகக் கத்தோலிக்கராகிய நாம் நமது கடமையினின்றும் வழுவிவிடலாகாது. அக்கருநாகங்களையே சிதறடிக்கும் கருடன்களாக நாம் மாறவேண்டும். உலகத்தின் உயர்வுக்காகப் பாடுபட்ட உத்தமர்களுக்கெல்லாம் இந்த உலகம் அளித்தபரிசு தூக்குமேடை, துப்பாக்கிக்குண்டு. ஏன்! பூவமெனும் பயங்கர அலைகளின் நடுவே அகப்பட்டுப் பதறித்துடித்த பாவிகளுக்கோர் பாய்க்கப்பலாய்த் துணைபுரியவந்த பரமனும் யேசுபெருமானே எத்தனையோ இன்னல்களை ஏற்றிருக்கிறார். **அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றும் கத்தோலிக்கராகியநாமும் இதற்கு விதிவிலக்கல்ல.** கத்தோலிக்கரின் கண்ணீர்வெள்ளத்தைப் பன்னீராகக் கருதி நீந்திவிளையாட விழைகிறார்கள் மதவிரோதிகள். கத்தோலிக்கரின்கண்களில் கண்ணீருக்குப் பதில் கனல் தெறிக்கும் வரையும் அப்படித்தான் எண்ணுவார்கள்.

பாடசாலைகள் பறிபோகின்றன. **மதத்தின் மங்காத வளர்ச்சிக்குத் தடைபோடுவதற்காக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கைதான் இது** என்பதை நாம் உணர்ந்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கத்தோலிக்க பெற்றோர் தம் செல்வச் சிறார்களுக்கு விரும்பும் கண்ணியமான கல்விப்பயிற்சியை அளிக்கவல்ல தாபனம் கத்தோலிக்க பாடசாலைகளே. கற்பிக்கப்படும் கலைகள்யாவும் கிறீஸ்தவ தன்மையுடன் மிளிரவேண்டும். போதனை, நிர்வாகம், ஆசிரியர்கள் யாவும் கிறீஸ்தவ தன்மையுடன் துலங்கவேண்டும். **இத்தகைய பாடசாலைகளே கத்தோலிக்க பிள்ளைகளைக் கிறீஸ்தவ வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தவல்ல அருமையான சூழலாகும். இதை நாம் அரசாங்க பாடசாலைகளில் எதிர்பார்க்கமுடியாது.** ஏனெனில், அவை செயற்படும்முறை, அளிக்கும்பலன்கள் இவை பற்றி நாம் நன்கறிவோம். இதுமட்டுமல்ல, கடவுள் வெறுங்கனவு, மதம் மயக்கம்தரும் அபின் என்றெல்லாம் நாஸ்திகம் பேசுவோரும், நாத்தழும் பேறியோரும் கற்பிக்கும் பாடசாலைகளில் எத்தகைய கல்வியை நாம் எதிர்பார்க்க முடியுமென்று நான் இங்கு குறிப்பிடத் தேவையில்லை.

இவ்வளவுஏன்? ஆட்சிமன்றத்திலிருக்கும் ஆட்சித்தலைவர்கள், அரசியல் ஞானிகள் இவர்களிற் பெரும்பாலோர் தமது கல்வியை எங்கே பெற்றார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். கடமையே கண்ணுகக்கொண்ட கத்தோலிக்க பாடசாலைகளில்தான் என்பதைப் பெருமையோடு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பாடசாலைத் தேசியமயக்கொள்கை பெரும்பான்மை மக்களின் விருப்பம் என்கின்றனர் ஆட்சிமன்றத்தினர். பாடசாலைகள் தேசியமயம் எனும் கொள்கையை முன்வைத்துப் போட்டியிட்ட சிறி. ல. சு. க., ச. ச. க., க. க., ஜா. வி. பெரமுன, ம. ஐ. மு. ஆகிய கட்சிகளைவிட, கொள்கையை எதிர்த்துப் போட்டியிட்ட, ஐ. தே. க., த. அ. க., ல. பி. க., தமிழ். கா. க. ஆகியன **ஒரு லட்சத்து இருபத்திரண்டாயிரத்து நானூற்றுப் பதினேழு வாக்குகளை அதிகப்படியாகப் பெற்றிருக்கின்றன** என்பதற்குக் கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் சான்றுபகர்கின்றன. ஆகவே, பெரும்பான்மையோர் எதிர்க்கிறார்கள் என்பது இங்கு வெள்ளிடைமலை.

நமது மதத்தைக் காப்பதற்காக, பாடசாலைகளைப் பாதுகாப்பதற்காக எத்தகைய இன்னல்களையும் அனுபவிக்கத் தயாராக வேண்டும். ராணுவம் பாயலாம், ஆணவம் சீறலாம், அசந்துவிடக்கூடாது நாம். எதிர்ப்புகள் எழலாம், இன்னல்கள் எதிர்கொள்ளலாம், ஏளனமாகப் பேசப்படலாம், அதற்கஞ்சி கத்தோலிக்கருடைய கடமையை நாம் கைவிடலாகாது. மதத்திற்காக மாட்ட நினைக்கும் சிறைச்சாலையை மாங்குயில் கூவிடும் மலர்ச்சோலையாய் மதிக்கவேண்டும். தூக்குமேடையே பரிசாகினும் துச்சமாக எண்ணவேண்டும். ஏனெனில், இவையெல்லாம் அழியும் தன்மை வாய்ந்த நம் உடலைமட்டும் அழிக்கவோ, வதைக்கவோ வல்லவை. **ஆத்துமத்தை எவராலும் அழிக்கவோ, அடக்கவோ, அடிமையாக்கவோ முடியாது.** அதற்குரியவர் அமலன். அவருக்கு மட்டுமே நமது ஆத்துமங்களில் அதிகாரமுண்டு.

கஷ்டத்தைக் கண்டு களைப்படையாது, தூற்றலைக்கேட்டுத் துவளாது, சீற்றத்தைக்கண்டு சிதறாது, மலையே வரினும் அதைத் தலையேசுமக்கத் தயாராய் நாமனைவரும் ஒன்றுபட்டு **ஒருமித்த குரலெழுப்ப வேண்டும்.** நமதுகுரல் ஆட்சிமன்றத்தின் அநீதியான நடவடிக்கையின் ஆணிவேரையே ஆட்டங்கொள்ளச் செய்வதாக அமையவேண்டும். இவ்வாறு இங்கு யான் கூறுமிடத்து ஒருசிலர் அரசாங்கத்தின் சட்டத்தை அவமதிக்கலாமா? எனத் தவருக அபிப்பிராயப்படலாம். ஆனால், சிந்தியுங்கள், சிந்தனைச் செல்வர்களே சிந்தியுங்கள். தீட்டப்படும் திட்டங்கள், வகுக்கப்படும் சட்டங்கள் இவை யாவும் நீதியானவைதானா? "சேசாருக்குரியதைச் சேசாருக்கும், சர்வேசுரனுக்குரியதைச் சர்வேசுரனுக்குங் கொடுங்கள்" என்று போதித்துள்ளார் யேசுபெருமான். ஆம்! அரசாங்கத்துக்குரியதை அதனிடம் அளிப்போம். ஆனால், **எமது ஆத்துமத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு எதுவித உரிமையும் கிடையாது.** குடும்பத்துக்குள்ள **அடிப்படைஉரிமையாம்** கல்விபுகட்டும் உரிமைகளில் அரசாங்கம் தலையிடமுடியாது. குடும்பம் எனும் பரிசுத்ததலத்தில் கால்வைக்க அதிகாரமில்லை அதற்கு. ஆகவேதான் மறுக்கிறோம், அநீதியான செயவிது அடிபணிய மாட்டோமென்று.

கத்தோலிக்க சந்ததியாரின் சுதந்திர வாழ்வுக்காக, நாயகன் யேசுவின் நன்மதத்தை நாடெல்லாம் பரவச்செய்ய நம்மால் இயன்றளவு பாடுபட வேண்டும். கத்தோலிக்கசேவையே நமது இலட்சியமாய் அமையவேண்டும். அதன்வளர்ச்சியே நமதுமகிழ்ச்சியாய், அதன் கீர்த்தியே நமது திருப்தியாக இருக்கவேண்டும். அதற்காக வீறுகொண்டெழுங்கள் கத்தோலிக்க தோழர்களே கடைசிவரை கத்தோலிக்க பாடசாலைகளைக் காப்பாற்றியே தீருவோமென்று.

ஆண்கள்மட்டுமல்ல, அடங்கிக்கிடக்கும் அரிவையரும் இதிற் சமபங்கு கொள்ளவேண்டும். மங்கையர் வெறும் மஞ்சத்து ராணிகள் மட்டுமல்ல, நெஞ்சத்திலே துணிவேற்பட்டால் கொஞ்சத்திலே விடமாட்டார்கள் வஞ்சகர்களை என்பதை வையகமே அறியச்செய்யவேண்டும். [illegible]

ஆட்டமட்டும் பழக்கப்பட்ட கரங்களல்ல, அநியாய ஆணைகளை உடைத்தெறியவும் வலுப்பெற்றவை அக்கரங்கள் என்பதை நிரூபிக்கத் திரண்டு எழுவீர் தாய்மார்களே, சோதரிகளே!

வணக்கம்.

புத்தளம் அ. எ. லெனி

## கடமையிலே சிறு குறையிருந்தாலும்

(" தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்" என்ற மெட்டு)

**பல்லவி**

கடமையிலே சிறு குறையிருந்தாலும்
மதத்தினில் குறைவு முண்டோ — எங்கள்
பள்ளிகளில் சில குறையிருந்தாலும்
கல்வி குறைவ துண்டோ.

**சரணம்**

(1) ஒழுக்கமில்லாத கல்வியினாலே
உயர்வு சேர்வதுண்டோ — ஒரு
குற்றமில்லாமல் உரிமையைப் பறித்துக்
கொடுமை செ(ய்)யலாமோ. (கடமையிலே)

(2) கொடுமையின் கீழும் பொறுமையாய் நின்று
உரிமைப் போராடுவோம் — வெறும்
அடிமைகள் போலக் குடியரசின்கீழ்
அடக்கப் படுவதேனோ. (கடமையிலே)

(3) பெற்றவளின் கைப் பிள்ளையைப் பறித்து
பிரிவு செ(ய்)யலாமோ — இதைக்
கற்றவர் கண்டும் கடிந்துகொள்ளாமல்
கண்ணை மூடுவதோ. (கடமையிலே)

(4) கண்ணிழந்தாலும் வாழ்க்கையில் எங்கள்
கடமை புரிந்திடலாம் — இந்த
மண்ணிலே மக்கள் மதம் இழந்திட்டால்
முத்தி பெறுவதுண்டோ. (கடமையிலே)

## சில்லாலைப் பொதுக்கூட்டம்

அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை ஆட்சேபிக்குமுகமாகச் சென்ற 1-11-60 செவ்வாய்க்கிழமை சில்லாலைக் கத்தோலிக்க ஆண்பாடசாலையில் திரு. சூ. அத்தனாசியார் அவர்கள்தலைமையில் ஒருபொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதில்பேசிய செல்வன் யோ. யஸ்ரின் கூறியதாவது: "பயங்கர கருமேகங்கள் சூழ்ந்துள்ள ஓர்இக்கட்டான சூழ்நிலையில் இங்கு நாம் கூடியிருக்கிறோம். இதுவரை எமதுபாடசாலைகள் தேவதொண்டிற்கும், ஆத்துமஇரட்சணியத்துக்குமாகத் தம்வாழ்க்கையை அர்ப்பணித்து அரும்பணிபுரிந்துள்ள குருமார், கன்னியாஸ்திரிமாரால் திறம்படநடாத்தப்பட்டு வந்தன. அவர்கள் கல்விக்கனியமுதத்தோடு தேவபக்தியையும் கலந்துஊட்டி எம்மை உண்மைத் தேவபக்தர்களாக்கி வந்தார்கள். மேல்வரிச்சட்டமான அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி நாமும் சிறுபராயத்திலேயே வேதகடமைகளில் பயிற்சிபெற்று வந்தோம். ஆனால், இப்போது அவர்களை நாம்இழந்து கத்தோலிக்கதிருமறையின் வாசனைவீசாத இருண்டசூழ்நிலையில் கல்விபயிலவேண்டிய இக்கட்டானநிலையில் இருக்கிறோம். இந்நிலையைப் போக்குவது உங்கள்கடன். ஆகவே, எழுமின், விழிமின், அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை ஆட்சேபித்துத் தடுமின்."

அடுத்தபடியாகச் சில்லாலையைச் சேர்ந்த பல்வேறுசங்கங்களின் பிரதிநிதிகளாகச் செல்வன் சு. சவுந்தரம், செல்விகள் மாகிறேற் மரியாம்பிள்ளை, விருஸ்பிள்ளை ஆகத்தம்மா ஆகியோர் பேசினார்கள். ஈற்றில் நான்குதீர்மானங்கள் கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டு அவைகளைக் கல்விமந்திரிக்கும், இலங்கைச் செனற்சபை அங்கத்தவர்களுக்கும் அனுப்பிவைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

**கிறே அலோசியஸ்**

## சம்பத்திரிசியார் கல்லூரிப் பரிசளிப்பு......

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

**3. கத்தோலிக்க பாடசாலை நிலைத்திருக்க வேண்டும்.**

அதன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசியபோது: **"ஒருகள்வன் உங்களிடமிருந்து ஒருபொருளைத் திருடிக்கொண்டு சென்ருலும் அப்பொருள் உங்களுடையதே. ஒருமுரடன் உங்கள் குழந்தையை உங்களிடமிருந்து பறித்துக்கொண்டாலும், குழந்தை உங்களுடையதே. இவ்வாறே கத்தோலிக்க பெற்றோருடைய உரிமைகளை அரசாங்கம் மறுத்து, கத்தோலிக்கபெற்றோர் கத்தோலிக்க பாடசாலைகளுக்குத் தமது பிள்ளைகளை அனுப்பவேண்டிய கடமைகளைப் பராதீனப்படுத்த முடியாது. எங்கள் கத்தோலிக்க பாடசாலைகள் நிலைத்திருக்கவே வேண்டும்.**

பௌத்தபிள்ளைகளைப் போல, முஸ்லீம் பிள்ளைகளைப்போல கத்தோலிக்கபிள்ளைகளும் இலங்கைப் பிரஜைகளே. மற்றவர்களைப் போலவே கத்தோலிக்க பெற்ருேரும் வரிசெலுத்துகிறார்கள். கத்தோலிக்க பெற்ருேரால் செம்புக்காசு தன்னும் வரிசெலுத்த முடியாதபோதும் அரசாங்க பாடசாலைகளில் மற்றவர்கள் அனுபவிக்கும் சலுகைகளைக் கத்தோலிக்கபிள்ளைகளுக்குக் கத்தோலிக்கபாடசாலைகளில் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இவை மனிதனது அடிப்படை உரிமைகள். இவற்றை எந்த ஓர் அரசாங்கமும் அதற்கு அதிகப்படியான ஆட்சிப்பலம் இருந்தபோதும் மறுக்கமுடியாது.

**இவ்வுரிமைகள் எங்களுடையவை. சிறுபான்மையோ, பெரும்பான்மையோ இவற்றைக் கொடுக்கவில்லை; இவை கடவுளால் கொடுக்கப்பட்டவை; இயற்கையினல் வழங்கப்பட்டவை. சுபாவப்பிரமாணத்தையும் தேவப்பிரமாணத்தையும் எதிர்த்துச் சட்டமியற்றுவது சிறுபான்மையினருக்குமட்டுமல்ல, பெரும்பான்மையினருக்குமே குற்றமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாதாவே! எங்கள்பாடசாலைகளைப் பாதுகாரும்

கொழும்பு, அர்ச். டி லா சால்பாடசாலையைச்சேர்ந்த "மாதாவின்பிள்ளைகள்" சபையாரால் ஒழுங்குசெய்யப்பட்ட "பச்சாத்தாப செபமாலைச் சுற்றுப்பிரகாரம்" சென்ற 23-10-60 ஞாயிறன்று சிறப்பாக நடைபெற்றது. இதிலே கொழும்பு, முகத்துவாரத்தைச்சேர்ந்த பங்குகளாகிய அர்ச். அந்திரே அப்போஸ்தலர், சந்தியோகுமையோர், அர்ச். ஸ்நாபகஅருளப்பர், பரிசுத்த தேவமாதா பங்குகளைச்சேர்ந்தவர்களும், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், பாடசாலைப்பிள்ளைகளும், இப்பகுதியைச்சேர்ந்த ஏனையபங்கினரும் கலந்துகொண்டனர்.

நான்குமைல்தூரமான இந்தச்சுற்றுப்பிரகாரம் மாலை 3-30மணிக்கு அர்ச். டி லா சால் பாடசாலை விளையாட்டு மைதானத்திலிருந்து அறையுண்ட திருச்சிலுவை முன்செல்ல, 12,000 பக்தர்களுக்குமேல் அணிவகுத்துநிற்கப் புறப்படலாயிற்று. சுற்றுப்பிரகாரத்தின் கடைசிப்பகுதியில் அழகுற அலங்கரித்திருந்த பரிசுத்த கார்மேல் மாதாசுரூபம் கொண்டு செல்லப்பட்டது. மாதாசபையினரும், நான்கு பங்குகளின் பிரதிநிதிகளும் முறையே மாறிமாறி அறையுண்ட திருச்சிலுவையைத் தாங்கிச்சென்றார்கள்.

சுற்றுப்பிரகாரம் நாலுபங்குகளிலும் பங்குக்கோவில்களின் முகப்புப்பக்கமாகச் செல்லக்கூடியதாய் ஒழுங்குசெய்யப் பட்டிருந்தது. நீலமும், வெள்ளையும்கலந்த கொடிகள், பாப்பரசரின் கொடிகளால்மாத்திரம் அலங்கரிக்கப் பட்டிருந்த வீதிகளின்வழியே செல்லும் பொழுது, கோவில்களின் முகப்புப்பகுதிகளில்நின்று அந்தந்தப்பங்குகளைச் சேர்ந்த ஒவ்வொருபாடசாலையின் பேராலும் ஒவ்வொருபிள்ளை அழகியபூக்களை ஞானப் பூச்செண்டாகப் "பரிசுத்த பாடசாலைநாயகி"க்கு ஒப்புக் கொடுத்தது. முகத்துவாரத்திலுள்ள ஒரேயொரு கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலையாகிய அர்ச். அந்திரே அப்போஸ்தலர் பாடசாலையும் தனது சார்பாக ஞானப்பூச்செண்டு ஒப்புக்கொடுத்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வைபவம்நடந்த இடத்தில்மாத்திரம் மூன்று மொழிகளிலும் "இலங்கைமாதாவே! எங்கள்பாடசாலைகளைப் பாதுகாரும்" என்று பெரியஎழுத்துக்களில் எழுதித் தொங்கவிடப்பட்டிருந்தது.

சுற்றுப்பிரகாரம் வீதிகள்வழியே செல்லும்பொழுது, செபமாலைசொலலி, "மாதாவே, துணைநீரே" என்பனபோன்ற பக்திரசக்கீதங்கள் படிக்கப்பட்டன. "இலங்கைமாதாவே, எங்கள்பாடசாலைகளைப் பாதுகாரும்! "பாடசாலைகளின் மாதாவே, எங்கள்பிள்ளைகளைப் பாதுகாரும்" என்ற மனவல்லயச்செபங்கள் சொல்லப்பட்டன.

தமிழ், ஆங்கிலம், சிங்களமாகிய மூன்றுமொழிகளிலும் செபிக்கக்கூடியதாய் ஒவ்வொருபங்கிலும் பிரிவுகள் ஒழுங்குசெய்யப் பட்டிருந்தன. அர்ச். அந்திரே அப்போஸ்தலர் பங்கைச் சேர்ந்த பிரிவில்மாத்திரம் 'தமிழில் செபிப்போர் பகுதி' இருந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தினரும், பெண்சாரணர் படையினரும் சுற்றுப்பிரகாரத்திற்கு உதவினர்.

சுற்றுப்பிரகாரத்தில் அதிகம்குறிப்பிடத்தக்கது என்னவெனில், செபமாலைக் காரணிக்க வியாக்கியானங்கள், தேவஇரகசியங்கள் எமது நாட்டின் இன்றைய பாடசாலைப்பிரச்சினைகள் முதலியவற்றிற்கமையச் சிந்தித்துச் செபிக்கக்கூடியதாக விளக்கி மூன்று மொழிகளிலும் பிரசுரஞ்செய்து விநியோகிக்கப்பட்டன.

நான்குமைலுக்கு மேற்பட்டதூரமான வீதிகளினூல்நடைபெற்ற சுற்றுப்பிரகாரம் மாலை 6-45மணிக்கு டி லா சால் விளையாட்டுமைதானத்தை அடைந்தது. ஒழுங்குசெய்யப் பட்டிருந்த அழகியபீடத்தில் சிறுபிரசங்கத்தின்பின் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பெற்றது.

— நிருபர்

# கண்டனத் தீர்மானங்கள்

இளவாலையிலும், அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள கத்தோலிக்க பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவரும், மாணவிகளும் கூடிநடத்தும் இம்மா பெருங்கூட்டமானது, அரசாங்கம் எமது முழுக்கல்வியையும் தானே எடுத்து நடத்தமுற்படுவதைப் பின்வரும் காரணங்களைமுன்னிட்டு ஆத்திரத்தோடும், உணர்ச்சிவேகத்தோடும் எதிர்க்கின்றது.

(1) கத்தோலிக்க பெற்றோர் தமது பிள்ளைகளைக் கத்தோலிக்க சூழ்நிலையுள்ள பாடசாலைகளுக்குஅனுப்பிக் கல்விபயிற்றுவதற்குத் தமக்கிருக்கும் உரிமையையும், கடமையையும் பிரயோகிக்க அரசாங்கம் தடைசெய்கின்றது.

(2) கத்தோலிக்க சூழ்நிலையோடு கூடிய கல்வியைக் கத்தோலிக்க மத அதிகாரிகள்மாத்திரம் தமதுபாடசாலைகளில் சரிவர அளிக்கமுடியும். உலகியலோடு சம்பந்தப்பட்ட அரசாங்கம் தமதுபாடசாலைகளில் இவ்வித சூழ்நிலையை ஏற்படுத்த முடியாதுஎன்பது எம்முடையகருத்து.

(3) அரசாங்கம் நமக்கு அளிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கும் சமய போதனுமுறை நம்மை உத்தம கத்தோலிக்கராகவோ அன்றேல் பண்பட்டபிரசைகளாகவோ ஆக்குவதற்கு முற்றிலும் தகுதிவாய்ந்ததன்று.

(4) முதலாம், இரண்டாந்தர பாடசாலைகள் தொடர்ந்து தனித்து இயங்குவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் மிகவும்கடினமானவைகள். இந்நிபந்தனைகளை அரசாங்கம் முன்கூட்டியே திட்டமிட்டு எமது உரிமைகளைப்பறிக்க முற்பட்டிருக்கின்றது.

(5) புதியகல்வித்திட்டம் இத்தன்மையானதென அரசாங்கம் தனது கட்சிப்பிரசார காலத்திலோ அன்றேல் இன்றுவரையிலோ மக்களுக்கு முழுமையாக அறிவிக்கவில்லை. மேலும் மக்களின் அபிப்பிராயபேதங்களைக் கவனியாது அவர்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கும்முறையில் தீவிரமாகவும், அந்தரங்கமாகவும் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றது. இச்செயல் மாக்ஸியநடைமுறையைத் தழுவியிருப்பதால் சனநாயகக்கொள்கைக்கு முற்றும்முரணானது. ஆதலால் நாம் புதியகல்வித்திட்டத்தை எதிர்க்கிறோம்.

## திருமதி இசபெல் மைக்கேல்அவர்களின் தேகவியோகம்

மல்லாகம், குளமங்கால், அர்ச். பிரான்சீஸ் சவேரியார்கோவில் சக்கிறிஸ்தாமாகிய திரு. யாக்கோப் மைக்கேல் அவர்களின் பிரிய பத்தினியான திருமதிஇசபெல் மைக்கேல் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து அந்திம தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்றுச் சென்ற 23-10-60 ஞாயிற்றுக்கிழமை காலஞ்செல்லலாயினு. மரிக்கும்போது இவவுக்குவயது 82.

இவ பாடசாலை சென்றறியா. அ... படித்தறியா. ஆயினும் தனக்கு இயல்பாகவுள்ள சுகிர்தபோக்காலும், சிறந்த தாய்மையாலும் தனதுபிள்ளைகளுக்கு உயர்ந்த இலட்சியங்களைப் படிப்பித்துத் தன்னுடைய ஏகபுதல்வனை ஒரு குருவாகவும், ஒருமகளைக் கன்னியாஸ்திரியாகவும், ஒருபேரப்பிள்ளையைக் குருவாகவும்காணும் பாக்கியத்தைப் பெறலாயினு.

இவவுக்கு ஐந்துபெண்பிள்ளைகளும், ஓர் ஆண்பிள்ளையுமாக ஆறுபிள்ளைகள் உள்ளனர். ஓர்அமலோற்பவ மரியநாயகிசபைக் குரவாகிய இவவின் ஏகபுதல்வர் வண. ஜேக்கப் மைக்கல் சவிரிமுத்துசுவாமியார் தற்போது நீர்கொழும்பு, பெரியதெரு, உதவிக்குரவராய் இருந்துவருகின்றார். கனிஷ்டமகளான சங். சிஸ்றர் பிரான்சிஸ்கா மேரி மட்டக்களப்பு, உப்போடையிலுள்ள சென் தெரேசா கலாசாலையில் தொண்டாற்றி வருகின்ரு. இவவின் குருபௌத்திரர் தற்போது சம்பத்திரிசியார் கல்லூரிப் பொக்ஷகராய் இருந்துவருகின்ற வண. பிரான்சீஸ் யோசெவ் மைக்கேல் சுவாமியார்.

1900-ம்ஆண்டு கார்த்திகை 19-ம் திகதியன்று திருமணஞ்செய்து, பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் பலரைக் கண்டுகளித்து நிகழும் 1960-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 19-ந்திகதியன்று தனதுதிருமண வைரயூபிலியைக் கண்டுகளிக்க இன்னும் 28தினங்கள் இருக்கும்போதே கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவாறுப்போகத் தனதுகுரு பௌத்திரரின் கரங்களால் அந்திய தேவதிரவியானுமானங்களைப்பெற்றுத் தன்னுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் முதலானோர் புடைசூழக் குருமகனின்கரங்களில் அவரே ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்க மரணத்திரையில் மறையலாயினுர்.

மறுநாட்காலை கோவிலிலே குருபௌத்திரரும், வண. இம்மனுவேல் செல்வராஜாசுவாமியாரும் துணைபுரியக் குருமகனல் இவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. பின்னர் அன்று சாயந்தரம் 4மணிக்கு 25பேருக்கு மேற்பட்ட குருமாரும், பலவிடங்களிலுமிருந்து வந்துகூடிய இனசனர், அன்பர்களும் சமூகமாக வீட்டிலே குருபௌத்திரனும், கோவிலிலே பங்குக்குரவர் வண. பி. ஆபிரகாம்சுவாமியாரும், கல்லறையிலே குருமகனும் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கப் பூமதானம்சிறப்பாக நடந்தேறியது.

R. I. P.

## மட்டக்களப்புத் தாண்டவன்வெளித் தபால்

—:—

**முதலாவது ஆண்டுவிழா:**

ஐப்பசித்திங்கள் 17-ம்நாள். மாலைப்பொழுது ஆலயவளவில் பலநிறக்கொடிகள் அசைந்தாடி யாவரையும் வரவழைத்தன! ஒலிபெருக்கி இனியகானமிசைக்க, எமதுபங்கில் யோசேவாஸ் முனிவரின் கத்தோலிக்க வாலிபர்சங்கம் ஸ்தாபகமான 1-வது ஆண்டுவிழாவின் முதல் நிகழ்ச்சி ஆரம்பமானது. சபையின்போஷகரும், பங்குக்குரவருமான வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து செபமாலை, பிரார்த்தனையைத்தொடர்ந்து 'கத்தோலிக்க சேவை' பற்றி அரியபிரசங்கம்செய்து, தேவநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது. விழாத்தினமாகிய மறுநாட்காலை பாடற்பூசைநிறைவேறியது. மாலை 6-30மணிக்கு கிளெனி ஆண்கள்பாடசாலையில் வருடாந்த கூட்டம் நடைபெற்றது. திருகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்கத்தலைவர் திரு. ஜோ. ஜே. டேவிற்அவர்கள் இதில் கலந்துகொண்டனர். சபையாரால் ஒருகாலாட்சேபமும், செல்வி ரஞ்ஜி சவரிராசா, செல்வி லில்லி மடோனு அந்தோனிப்பிள்ளை ஆகியோரால் நடனமும், சபையாரால் தேனீர்விருந்தும் நடைபெற்றன. செயலாளர் திரு. எஸ். ஜெயராசா, நிதியாளர் திரு. அந்தோணிப்பிள்ளை யோசேப் ஆகியோரால் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தலைவர் திரு. எஸ். தவராசா அவர்களால் சபையார்மேற்கொண்ட ஊழிய அறிக்கை வாசிக்கப்பட்டதுடன் பேருபகாரிகளுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

சபையின் அடுத்தவருட உறுப்பினர் பின்வருமாறு தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. எஸ். தவராசா, உபதலைவர் திரு. பி. ஜி. சவரிராசா, செயலாளர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, உதவியாளர் திரு. எஸ். ஜெயராசா, தனுதிகாரர் திரு. எஸ். அந்தோனிதாசன், நிருவாகஅங்கத்தினர் திரு. அந்தோனிப்பிள்ளையோசேவ் வண. பங்குக்குரவர் ஆசிரியமணி திரு. கே. எல் இராசேந்திரம், திருவாளர்கள்: ஏ. பொன்னுத்துரை, எஸ். ஈ. அந்தோனி. எஸ். கந்தசாமி, எஸ். சந்தியாப்பிள்ளை, எஸ். ஜெயராசா, எம். கமிலஸ், செல்வம் யோசேப் ஆகியோரால் கடந்தகால சேவையைப்பாராட்டி நல்வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன.

**உல்லாசப் பொழுதுபோக்கு:**

23-10-60ஞாயிறன்றுகாலை இரண்டாவதுபூசைகண்டு பங்குக்குருவானவரின் ஆசீரோடு கத்தோலிக்க வாலிபசங்கத்தினர், துவிசக்கரவண்டிகளில் ஓர்உல்லாசப் பிரயாணத்தை ஆரம்பித்தனர். வழியிலே கீதங்கள்பாடிக்கொண்டு முகத்துவாரம் என்னும் இடத்தைஅடைந்தனர். அங்கு உதைபந்தாட்டம், கடல்குளிப்பு முடிவானதும் மதியபோசனஞ்செய்தனர். மாலை 2-30மணிக்குச் சங்கத்தின் 2-வதுவருட முதற்கூட்டத்தைக் கூடினர். எமதுபங்கில் 30-10-60[illegible] திருகோணமலை [illegible] சங்க மகாநாட்டைச் சிறப்புற நடத்துவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுத் தேனீர்விருந்துமுடிவானதும் சுகசேமமே ஆலயம்திரும்பினர்.

**சேமக்காலை ஆசீர்வதித்தல்:**

1-11-60 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்குக் கள்ளியங்காடுஎனும் சேமக்காலையானது மேற்பார்வையாளரும், பங்குக்குரவருமான வண. வம்பேக் சுவாமி, புளியடிக்குடாப் பங்குக்குரவர் வண. ஏ. செலர்சுவாமிஆகியோரால் ஆசீர்வதிக்கப்பட்டது. பூசைப்பரிசாரகரும், பாடகர்குழாமும் குரவர்களுடன் சேர்ந்து திக்ககீதங்கள்பாடி அணிவகுத்துச் சென்றனர். கல்லறைகள் மெழுகுவர்த்திகளா[illegible] புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

— கண்டு களித்தோன்.

## கிறீஸ்துஇராசா ........

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

மையையும் இருஆசிரியர்களும் விளக்கினர். கட்டளைக்குரவர் சிலபுத்திமதிகள்கூறியதும் திரு. தே. சிந்தாத்துரை நன்றியுரைகூறினுர். பின்னர் வெற்றிவீரர்களுக்கு வண கட்டளைக்குரவரால் பரிசில்கள்வழங்கப்பட்டன. ஈற்றில், சற்பிரசாதஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதேமுடிவேறியது.

சூ. பவுலினப்பு

ஞானவாசிணையினுல் நாம் தேவனைத் தேடுகிறோம். தியானத்தினுல் அவரைக் கண்டுபிடிக்கிறோம்.

— அர்ச். வேணுட்.

- பூரித்த உள்ளம், எவரிலும் பார்க்க வேகமாய்ப் பரிசுத்தத்தனத்தில் முன்னேறும்.

— அர்ச். பிலிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**கார்த்திகை—1960**

ஞா. 13 பெந்தக் கோஸ்தின் பின் 23-ம் ஞாயிறு (அர்ச். திதாக்கியார் ஞா. (வி. ம.) [ப]
தி. 14 அர்ச். யோசேபாத் அப்பர் [சி]
செ. 15 அர்ச். பெரிய அல்பேட் (வி. ம.) [வெ]
புத. 16 அர்ச். யேற்றூட் அம்மாள் [வெ]
வி. 17 அர்ச். புதுமை கிறகோரியார் [வெ]
வெ. 18 அர்ச். இராயப்பர், சின்னப்பர் மகாலயங்களின் அபிஷேகத் திருநாள் (வி. ம.) [வெ]
ச. 19 அர்ச். எலிசபேத்தம்மாள் (அர்ச். பொன்சியானூஸ் ஞா.) [வெ]

சத்திய வேத
பாதுகாவலன்
1960-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 10-ந் திகதி

## ஆழ்ந்த கவலைக்குள்ளாகி விட்டோம்

கடந்த 7-11-60 காலை வானொலி மூலம், கௌரவ பிரதமமந்திரியாரவர்கள் 'கல்விமசோதா' சம்பந்தமாக ஒலிபரப்பிய பேச்சைக் கேட்டோம். மகாவந். இலங்கை மேற்றிராணியாண்டவர்மார்கள் ஓர்கூட்டுஅறிக்கைவிடுத்ததைக் குறித்துப் பிரதமமந்திரியார் அது **போதிய பொறுப்புணர்ச்சியற்ற செயலென்று** பகிரங்கமாக எடுத்துக்கூறியுள்ள வார்த்தைகள் எம் இதயத்தை ஆழமாகப் புண்படுத்திவிட்டன. கத்தோலிக்க சமுதாயம் முழுவதையுமே அவ்வார்த்தைகள் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கிவிட்டன என்பதை மிக்கவிசனத்துடன் தெரிவிக்கவேண்டியுள்ளது. பொதுமக்களிடையில் பிரதமரின் பேச்சுத் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணிவிடக்கூடுமென்பதை உணர்ந்தமை காரணமாகவே இவ்விடயத்தை இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது.

இற்றைக்குப் பன்னூற்றுண்டுக்காலமாக நமது நாட்டின் கல்வி, சமயம் சமுதாயமுன்னேற்றம் முதலாம் துறைகளில் விழிப்பும், பொறுப்பும், ஆர்வமும், முயற்சியும் கொண்டு அல்லும் பகலும் அயராதுழைத்த எங்கள் ஆன்மமேய்ப்பர்களின் புனிததொண்டினை இலங்கை மக்கள் மாத்திரமல்ல உலகமே நன்குணரும். எதிரிகள்கூட ஏகமனதாக ஏற்றுக்கொள்வர். சிறப்பாகத் தமது குழந்தைகள் கல்விகற்கும் கலைக்கழகத்தின்மூலம் பிரதமர் அவர்களும் ஐயந்திரிபற அறிந்திருப்பார்கள்.

அப்படியிருக்கவும் இவ்வாறு வீண் பழிசுமத்தி குறைவுபடுத்திப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்திருப்பது உண்மையில் இதயபூர்வமாக எழுந்ததோ? அன்றேல் அரசியல் வெற்றுவார்த்தைகள்தாமோ? என்று நாம் ஐயுற்று அதிசயப்பட்டு வருந்தவேண்டியிருக்கின்றது.

மேலும் இதுநாள்பரியந்தம் எந்த மதத்தினரும் கண்டும் கேட்டும் கருதியுமிராவகையில் பரித்தியாகத்தின் அத்திவாரத்தில் புனிதசேவை புரிந்துவரும் எங்கள் மேய்ப்பர்கள், நமது உன்னதமான கல்விச்சூழலுக்குப் பங்கம் ஏற்பட்டபோது அது பிழை என்று சுட்டிக்காட்டும் உரிமையைப் பொறுப்புணர்ச்சியற்ற செயலென வர்ணிப்பது எந்த அளவில் பொறுப்புணர்ச்சியுள்ள செயலாகும் என்பதே விளங்கவில்லை.

பிறர்வாழத் தான் சாகும் பெருவாழ்வின் அம்சமாகத் தனது காலம் பொருள் உயிரையுமே அர்ப்பணித்துக் கைம்மாறுகருதாப் பணிபுரிந்துவரும் நமது கத்தோலிக்க நிருவாகத்தை, அந்நியநாட்டார் கூறுமுறையில் "யோக்கியமானகளவு" மூலம் அபகரிக்கும் அரசாங்கத்தின் செய்கை அநீதியானது என்பதை அறிவுறுத்துவது பொறுப்புணர்ச்சியற்ற செயலா? உரிமைகள் கவரப்படும்போது, ஒரேயடியாகக் காரணங்களெதுவுமின்றி உறிஞ்சப்படும் வேளையில் அது பாதகமானது என்று திறந்தமனதுடன் எடுத்துரைக்கும் சலுகைகூட இல்லாத நாட்டில் 'சனநாயகம் மலர்கிறது' 'சுதந்திரக்கொடி பறக்கிறது' என்று புகழ்ந்து போற்றிக்கொள்வது விந்தையாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறதே.

சிம்மாசனப் பிரசங்கத்தின் பின்னர், எங்கள் ஞானதிகாரிகள் கல்விமசோதா சம்பந்தமாகப் பிரதமருடனும் கல்விமந்திரியுடனும் கடிதப்போக்குவரத்தும், பேட்டிகளும் நிகழ்த்தினார்கள்; நீதியான கோரிக்கைகளை விண்ணப்பித்தார்கள். ஆனல், அவற்றால் ஒரு பயனும் காணுதநிலையில், இறுதியாக, விநயமாகவும கௌரவமாகவும் பண்புடனும் தீர ஆராய்ந்து அறிக்கைவிடுத்தார்கள். அவ்வறிக்கையில் பொறுப்புணர்ச்சியின் பெருமையும் மகத்துவமும் தெரிகின்றனவேயன்றி பொறுப்பற்றநிலை கடுகளவும் காணப்படவில்லையென்பதைச் சாதாரணமக்களுமே ஏற்றுக்கொள்வர்.

அன்றியும் இவ்வாழ்க்கை ஓர்இலக்கிற்கு உதவிமாத்திரமே, "மறுஉலகில் நித்திய பேரின்பத்தை அடைவதே எமதுஇலக்கு" என்ற உண்மையை எடுத்துரைத்தல் பொறுப்புணர்ச்சியற்ற செய்கையா?

தமது பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வி அளிக்கப்பட வேண்டுமெனத் தெரிந்துகொள்ளும் முதலுரிமை பெற்றோருக்கேயுண்டு எனச் சர்வதேச விஞ்ஞாபனச் சான்றுடன் உரிமைகளுக்காக விண்ணப்பித்தல், பொறுப்பற்றதென்றால் உலகம் ஏற்குமா?

உரிமைகளை அபகரிக்கும்போது மௌனிகளாகவும், பொம்மைகளாகவும் இருக்குமாறு அடக்கும் அதர்மம் சர்வாதிகார நாடுகளில்தான் சகசம் என்று கூறுகிறார்கள். சுதந்திரத்தைப்பறிக்கும்போது சும்மாயிரு; கடமைகளைக் கவரும்போது கண்களை மூடு; கொடுமைகளைக் கைகூப்பிக் கும்பிடு, என்று நிர்ப்பந்திப்பது எதேச்சாதிகாரத்தின் இரும்புத்திரை நாடுகளில்தான் நிகழ்கின்றது என்கிறார்கள். ஆனல், மக்களுக்காக மக்கள் ஆளும் மக்களாட்சியிலும் தீவிரமாக இந்த மாயநிழல் படிந்துவருவதைக் காணும்போது இந்தச் 'சனநாயகம்' மனித புத்தியால் விளங்கிக்கொள்ள முடியாத மர்மமாகவே தோற்றுகிறது

**உரிமைகளைப் பொறுமையோடு கேட்பதா அன்றேல் உரிமைகளைக் கடினமாக மறுதலிப்பதா பொறுப்புணர்ச்சியற்ற செயல்?** என்பதை மக்கள் உணருங்காலம் சேய்மையில் இல்லை. மிகமிக அண்மையிலேயே இருக்கிறது. செபதபத்துடன் பொறுத்திருப்போம்; உண்மை மெதுவாக நகர்ந்தாலும் அது குறித்த இடத்தை நிச்சயம் வந்தேசேரும்.

அமைதியையும் சுபீட்சவாழ்வையும், சமாதானத்தையுமே தங்கள் மேலான இலட்சியங்களாகக்கடைப்பிடித்து ஒழுகிவரும் எங்கள் மதிப்புக்குரிய ஞானமேய்ப்பர்களின் கண்ணியத்தையும், பொறுப்புணர்ச்சியையும் பற்றி வரலாற்றின் ஏடுகள் கூறும். அநுபவம் மிக்கபெரியோர்களின் வாய்மொழியால் அறியலாம். அரசியற் கண்ணேடு பார்ப்பவர்கள் பொறுப்புணர்ச்சியற்றவிதமாக வார்த்தைகளை வறிதேயள்ளிக் கொட்டுவது வருந்தத்தக்கதெனக் கூறிநிற்கிறேம்.

எங்கள் நல்லாயர்களின் புனிதப் புகழ் என்றும் ஓங்குக!

# மேற்றிராணி ஆண்டவரின் நிருபம்

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

கிறிஸ்தவசீவியத்தையும் தந்தருளும்படி வேண்டிக்கொள்வோமாக.

மூன்ருவதாக, இந்த அநீதசட்டங்கள் அமுல் நடத்தப்படுவதினிமித்தம் கத்தோலிக்கர் என்றமட்டில் நீங்களும் நாமும் எமது வாழ்க்கையின் ஓர் அம்சமாகக்கூட்டி அமைத்த தாபனங்களை இழத்தல் கடவுளின் சித்தமானல், நாம் மனச்சோர்வுகொள்ளாதிருப்போமாக. இத்தகைய சட்டங்களால் ஏற்படவிருக்கும் ஆபத்துக்களை விலக்குவதற்கு, தொடர்ந்து செபஞ்செய்தும், நமது கிறிஸ்தவ விமரிசையை உபயோகிக்க முயற்சி எடுத்தும் வருவோம். பல்லாண்டுகட்குமுன் உங்கள் மூதாதையர் தங்கள் விசுவாசத்திற்காக, நட்டத்தையும், மரணத்தையும் அனுபவித்ததை நினைவு கூருங்கள்.

ஒவ்வொரு விசாரணைப்பங்கிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைப் பாதுகாப்பியக்கத்தைச் சிபார்சுசெய்ய விரும்புகின்ருேம். இவ்வியக்கத்தில் பெற்ருேர் விசேஷமாய்ச் சேர்ந்து, எங்கள் பிள்ளைகளுடைய எதிர்கால சீவியத்தைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கைகளை ஒருமுகப்பட்டு எடுப்பார்களென்று எதிர்பார்க்கின்ருேம்.

நான்காவதாக, மிகவும் காத்திரமான ஒரு நன்மதிகூற விரும்புகின்ருேம்: முன்னிலும்பார்க்க இப்போது எம்மிடையே நாம் கிறிஸ்தவ அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கவேண்டும்.

இத்தருணத்தில் ஒருவிடயத்தை நினைவூட்ட விரும்புகின்ருேம்: திருச்சபை விரோதிகள் எம்மத்தியில் பிரிவினைகளை உண்டுபண்ணுவதற்கு வழிவகைகளைக் கையாள ஒருபோதும் தயங்கமாட்டார்கள். எங்களைச் செல்வந்தர் ஏழைகள் என்றும், கல்வி அறிவுடையோர் கல்வி அறிவில்லாதோர் என்றும், எசமான்கள் அடிமைகள் என்றும் பிரித்துவைக்கப் பார்க்கிருர்கள். அவர்களுடைய சூழ்ச்சிகளில் நீங்கள் சிக்கிக்கொள்ளக் கூடாது. சருவேசுரனுடைய உதவியினலும், இஸ்பிரீத்து சாந்துவானவருடைய வழிநடத்துதலினலும் உண்மை எதுவென்று நீங்கள் இலகுவாகஅறிந்துகொள்ளலாம்

உங்கள் மேற்றிராணியாருக்கும் ஞான மந்தையாகிய உங்களுக்குமிடையிலிருக்கும் ஆத்மீக பந்தனத்தை அறுத்துவிட விரோதிகள் விசேட பிரயத்தனங்கள் எடுத்துவருகிருர்கள். திருச்சபையை அழிக்க விரோதிகள் முயற்சியெடுக்கும்பொழுது இந்த முறையைத்தான் கையாளுகிருர்கள். உங்கள் ஆயராகிய எமக்கும் உங்களுக்குமிடையே இருக்கவேண்டிய ஆத்மீக பந்தனம் எங்கள் விசுவாசத்தை அத்திவாரமாகக்கொண்டுள்ளது. ஏனெனில், இந்தப்பந்தனம் எமது ஆண்டவராலேயே ஏற்படுத்தப்பட்டது. ஆகவேதான், எங்கள் திருவேதம் படிப்பிக்கும் இந்த உண்மையை நாம் என்றும் தெளிவாக அறிக்கையிட்டுப் பாதுகாக்கவேண்டும் என உங்களுக்கு நினைவுறுத்த ஆசிக்கின்ருேம். திருச்சபையிலுள்ள விசுவாசிகளுக்கு மேற்றிராணிமார்தான் தந்தையும், தலைவரும், ஆயரும். உங்களுக்கும் எமக்குமிடையே இருக்கவேண்டிய இந்த ஒருமைப்பாடின்றி உண்மையான கத்தோலிக்க வாழ்க்கை இருக்கவே முடியாது. உங்கள் ஞான மேய்ப்பர்களுடன் நீங்கள் ஒன்றுபட்டு நிற்பதற்கு இதுவே முக்கியமானகாலம்.

கடவுள் உங்களுக்கு ஞானவழிகாட்டிகளாய்த் தந்திருக்கும் உங்கள் மேற்றிராணியார் மட்டிலும், குருமார் மட்டிலும் எப்போதும் பிரமாணிக்கமாய் நடந்துகொள்ளுங்கள். அவர்களுக்கு அமைந்து, அன்புகாட்டி, அவர்களது புத்திமதியைக்கேட்டு நடவுங்கள்.

ஆண்டவருடன் ஒன்றித்து இருப்பதற்கு நாம் எம்மிடையேயும், அவருடைய பிரதிநிதிகளுடனும் ஒன்றித்து வாழ்தல்வேண்டும். இத்தகைய நிலையில் எந்த உலக சக்தியும் எம்மைக் கிறிஸ்துநாதரிடமிருந்து பிரித்துவிட முடியாது.

கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துநாதரிலும்
அமலோற்பவ மரியன்னையிலும்
உங்களைநேசிக்கும்
\+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்,

## சுவிசேஷ சிந்தனை

"உன் விசுவாசம் உன்னைச் சவுக்கியப்படுத்தியது."

யேசுக்கிறிஸ்துநாதர், விசுவாசத்தைப்பற்றிப் பலதடவைகளில் கூறியிருக்கிருர். விசுவாசம் இல்லாமல் இருந்த அப்போஸ்தலரைப் பலதடவைகளில் கண்டித்துள்ளார். விசுவசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லியிருக்கிருர். விசுவசிக்கிறவர்கள் தங்கள் சரீர நோய்களிலுமிருந்து, விசுவாசத்தின்மூலம் சுகம் அடைந்திருக்கிருர்கள். இதை அத்தாட்சிப்படுத்துவதற்காகப் பின்வரும் உவமை சான்ருகிறது:

ஒருநாள் யேசுக்கிறிஸ்துநாதர் ஒரு அதிபதியின் மகளை சுகப்படுத்துவதற்குத் தன்னுடைய சீசருடன் சனக்கும்பல் சூழ்ந்துவர, ஒருவழியால் வந்தார். அப்போது, 12 வருடகாலமாகப் பெரும்பாடுஉள்ள ஒரு விதவை, அவரின் உடுப்பின் விளிம்பைத் தொட்டாள். அப்பொழுது அவள் அதிசயமாகச் சுகமடைந்தாள். இதனல் யேசுநாதர், தன்னிடம் இருந்துபோன, வெளிப்போன வரத்தை அறிந்து, தன்னைத் தொட்டது யார் என்று சனக்கும்பலைப் பார்த்துக் கேட்டார்.

அந்த ஸ்திரி அவர் முன்வந்து, நமஸ்கரித்து, உள்ளதை உள்ளபடி சொன்னுள். அப்பொழுது, யேசுக்கிறீஸ்துநாதர் அவளுடைய விசுவாசத்தை மெச்சி, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க பெற்றோரின் கல்வி உரிமை

## 1. பெற்றோரின் அடிப்படை உரிமை

**இயற்கை முறைப்படி** பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் பொறுப்பும், உரிமையும் முந்தமுந்தப் பெற்றோருக்கே உரியதாகும். ஏனெனில், பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்காகவே குடும்பம் சருவேசுரனால் இஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அரசியல் சமுதாயத்திற்குக் குடும்பமே அடிஅத்திவாரம் என்பது மறுக்க முடியாத சரித்திர உண்மையாகும். ஆதி இயற்கைச் சமூகங்களாகிய குடும்பங்கள் தங்கள் பாதுகாப்பிற்காகவும், நல் வாழ்விற்காகவுமே ஒன்றுபட்டன. ஒன்றுபட்ட குடும்பங்களின் ஒற்றுமையைப் பாதுகாக்கத் தகுந்தஅதிகாரம் அவசியமாயிற்று. இன்றேல் ஒற்றுமைக்கும், நல்வாழ்விற்கும் பதிலாக அராஜகமும், சீர்கேடும் தாண்டவமாடியிருக்கும். இதினிமித்தமே ஒன்றுசேர்ந்த குடும்பங்கள், பொது நன்மையைப் பாதுகாத்து வளர்க்கக்கூடிய ஓர் அதிகாரத்தை ஏற்படுத்தி, அதை அரசாங்கம் என்ற பெயரினால் அழைத்தன. ஆகவே, **அரசாங்கம் குடும்பத்திற்கு முந்திய சமூகம் அன்று. குடிபதிகளின் நன்மைக்காகவே அது ஏற்படுத்தப்பட்டது.** எனவே, **குடும்பத்திற்குள்ள அடிப்படை உரிமைகளில் அரசாங்கம் தலையிட முடியாது.** மானிட சீவியத்தின் சகல துறைகளையும் மட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. சிலவெளிக் கருமங்களைச் சீர்ப்படுத்தி, நிரைப்படுத்த அதற்குரிமை உண்டென்பது உண்மையே. உதாரணமாக: பொது ஒழுங்குகளையும், அமைதியையும் நிலைநாட்டல். ஆனால், ஒருவனின் அடிப்படையான உரிமைகளை மட்டுப்படுத்த அதற்கு அதிகாரமில்லை. உதாரணமாக, ஒருவனது எண்ணங்கள், கொள்கைகளைக் கட்டுப்படுத்தல். தனி மனிதனின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், உலக காரியங்களில் குடும்பத்திற்குத் துணைபுரியவுமல்லாது, வேறு காரணங்களையிட்டுக் **குடும்பமென்னும் பரிசுத்த தலத்தில் கால்வைக்க அரசாங்கத்திற்கு அதிகாமில்லை.**

தேவ இரக்கத்தினால் அளிக்கப்பட்ட செல்வங்களாகிய பிள்ளைகள்மேல் குடும்பம் செலுத்தும் உரிமை அதன் **அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும்.** பிள்ளைகளுக்கு நற் கல்வியூட்டுவதும், அவர்களுடைய பிற்கால நலனுக்குத் தேவையானவைகளைச் சம்பாதித்துக் கொடுப்பதும் பெற்றோரின் கடமையும், உரிமையுமாகும். இவ்வுரிமை அரசாங்கத்திற்கோ, சமுதாயத்திற்கோ உள்ள **உரிமையிலும் முற்பட்டதாகும்.** எனவே, **உலகிலுள்ள எந்தச்சக்தியும் அதை அபகரிக்கமுடியாது.** பெற்றோரைப் பொறுத்தளவில் பிள்ளைகளைப் பரிபாலிக்கும் கடமை அவர்கள் தாமாகவே சீவியத்தைக் கொண்டுநடத்தும் ஆற்றலைப் பெறும்வரையும் நீடித்திருக்கிறது. ஆகையால், கல்வியூட்டும் உரிமையும் அக்கால எல்லைவரை நீடித்திருக்கவேண்டும். "ஏனெனில், இயற்கைச் சந்தானவிருத்தியை மட்டுமல்ல, மனிதன் தன்னியல்புக்கேற்ற உத்தமதனத்தை அடையுமட்டும் முன்னேறிச் செல்லவேண்டுமென்றும் விரும்புகிறது" என்று **அர்ச். தோமையார்** குறிப்பிடுகின்றார் (Summa III, Q. 41,a.1.).

பிள்ளைகளின் கல்வி விடயத்தில் பெற்றோருக்குரிய உரிமை **அவர்களின்** அழிக்கமுடியாத அடிப்படை உரிமைகளில் ஒன்றென்பது **மனுக்குலத்தின் பொது அபிப்பிராயமாகும்.** இவ்வுரிமையை **ஐக்கிய நாடுகளின் தாபனமும்** இப்போது தனது **"மனித உரிமைகளின் பொது விஞ்ஞாபனத்தில்"** அங்கீகரித்துள்ளது. "தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கப்படவேண்டிய கல்வியின் தன்மையைத் தீர்மானிக்க முந்தமுந்தப் பெற்றோருக்கே உரிமையுண்டு" *(பிரிவு 26 (3))*. எனவே, "குடும்பத்திற்குமுன் அரசாங்கத்திற்கே குழந்தை சொந்தம். ஆகையால், குழந்தையின் கல்வியில் அரசாங்கத்திற்குப் பூரண உரிமையுண்டு," என்று கூறத்துணிவோர் பெற்றோரின் மேற்படி அடிப்படை உரிமைக்கு உலைவைக்கின்றனர் என்றே கொள்ளவேண்டும். அவர்கள் கூறும் நியாயமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று: "மனிதன் பிரசையாய்ப் பிறக்கிறான். ஆகவே, அரசாங்கத்திற்கே அவன் முதற் சொந்தமானவன்," என்ற கூற்று மனிதனின் இருத்தல் உடைமையை மறந்துவிடுகிறது. **மனிதனின் இருத்தல் உடைமை அரசாங்கத்திடமிருந்தல்ல, பெற்றோரிடமிருந்தே வருகிறது.** இதுபற்றி **13-ம் சிங்கராய பாப்பரசர்** கூறுவதாவது: "குழந்தைகள் தந்தையின் உடைமைகள். அவர்கள் தந்தையுடைய ஆட்தன்மையின் நீடிப்புகள் என்று கூறப்படின் அது மிகையாகாது. திட்டமாகக்கூறின் அவர்கள் தாமாகவன்றித் தாம் உதித்த குடும்பம்மூலமாகவே அரசியல் சமுதாயத்தில் பிரவேசித்து அங்கத்துவம் பெறுகின்றனர்." ஆகவே, "தந்தையின் அதிகாரம் அரசாங்கத்தினால் பறிக்கப்படவோ, அழிக்கப்படவோ முடியாததொன்றாயிருக்கின்றது. ஏனெனில், இவ்வுரிமையும், மனிதனின் உயிரும் ஒரே சுனையிலிருந்தே சுரக்கின்றன" (Rerum Novarum).

## 2. கட்டுப்பட்ட உரிமை

ஆனால், இக்கூற்றிலிருந்து பெற்றோரின் உரிமை வரம்பில்லாதது என்ற முடிவுக்கு நாம் வந்துவிடலாகாது. ஏனெனில், **13-ம் சிங்கராய பாப்பரசரே** கூறுவதுபோல், **பெற்றோரின் உரிமை, மனிதனின் கடைசிக்கதிக்கும், தேவப்பிரமாணங்களுக்கும் அகத்தியமாய்க் கட்டுப்பட்டிருக்கிறது:** "தங்கள் பிள்ளைகளைப் பயிற்றும் உரிமை பெற்றோருக்கு இயற்கையாகவே உண்டு. ஆனால், இப்பயிற்சியைத் தேவாசீர்வாதத்தினால் பெற்றெடுத்த குழந்தையின் கடைசிக்கதிக்கு ஏற்றதாக அமைக்க அவர்களுக்குக் கடமையுண்டு. ஆதலால், இவ்விடயத்தில் தங்களுக்குள்ள உரிமையை எவராவது அபகரிக்க எத்தனித்தால், பெற்றோர் அத்தகைய செயலை முழுமூச்சுடன் எதிர்க்கவேண்டும். தங்கள் பிள்ளைகளின் கல்விப்பயிற்சி தங்கள் சொந்தக் கண்காணிப்பிலிருக்கும்படி கிறிஸ்தவ பெற்றோர் தங்கள் விசுவாசக் கடமைகளுக்கிசையப் பூரணமாய் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். அவபக்தியாகிய படுநஞ்சைத் தங்கள் பிள்ளைகள் பருகக்கூடிய பாடசாலைகளுக்கு அவர்களை அனுப்பப் பெற்றோர் அறவே மறுத்துவிடவேண்டும்" (Sapientiae Christianae)

## 3. சமய பாடசாலைகளின் இன்றியமையாமை.

குழந்தைகளைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதே கத்தோலிக்க பெற்றோரின் மாபெரும் பொறுப்பாகும். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விரும்பும் இக்கல்விப் பயிற்சியை அளிக்கக்கூடிய தாபனம் **கத்தோலிக்க பாடசாலை ஒன்றே.** ஏனெனில், கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவதற்குச் **"சமயக்கல்வி அளித்தல் மட்டும் போதாது.** கற்பிக்கப்படும் கலைகள்யாவும் கிறிஸ்தவதன்மையோடு மிளிரவேண்டும்" *(13-ம் சிங்கராயர்)*. சமயபோதனைக்கென முக்கால்மணி அல்லது ஒருமணிநேரம் ஒதுக்கப்பட்டுவிட்டால் அது கிறிஸ்தவகல்விக்குப் போதியதன்று. **பாடசாலையில் இடம்பெறும் எல்லா விடயங்களும் கிறிஸ்தவ உணர்வில் ஊன்றித் திளைத்திருக்கவேண்டும்.** "கத்தோலிக்க பாடசாலையில் எல்லாம் கிறிஸ்துவமயமாய் விளங்கவேண்டும்; போதனை, நிர்வாகம், ஆசிரியர்கள், பாடத்திட்டம், பாடநூற்கள் யாவும் கிறிஸ்தவதன்மையுடன் துலங்கவேண்டும்" *(11-ம் பத்திநாதர்)*. இத்தகைய பாடசாலையே கத்தோலிக்க பிள்ளைகளைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதற்குத் தகுதிவாய்ந்த சூழலாகும். ஆகவே, கத்தோலிக்க பெற்றோரின் கல்வி அடிப்படை உரிமையைப் பாதுகாக்கக் **கத்தோலிக்க பாடசாலைகள் இருத்தல் இன்றியமையாத** ஒன்றென்பது வெள்ளிடைமலை.

—திருத் தொண்டன்

# எங்கள் திருச்சபைத்தாய் வாழ்க!

("எங்கள் திராவிடப் பொன்னாடே" என்ற மெட்டு)

**தொகையரு**

சந்ததம் புனிதமொடு விளங்கும் தாய் வாழி,
சதிகார சாத்தானும் அணுகாத தாய் வாழி — எங்கள்
திருச்சபைத் தாய் வாழி.

**பல்லவி**

எங்கள் திருச் சபைத்தாய் வாழ்க — திரு
ஞான மறை வாழ்க.
அறம், அருள், நீதி, கருணையின் சோதி
வழங்கிடும் தாய் வாழ்க. — (எங்கள்)

**சரணம்**

(1) திருச் சுதனாரெம் யேசுபிரான் — அன்று
நிறுவிய ஞானப் பத்தினியாள்
பொங்கும் அருள்கள் பொழிந்திடவே — என்றும்
புவியினில் தன் பணி ஆற்றுகின்றாள்
அழியாத உண்மை, மழைபோல நன்மை
குறையாது பரிமாறும் தாய்வாழ்க. — (எங்கள்)

(2) சரித்திரம் போற்றும் ரோமையிலே — திருச்
சிலுவையின் வீரர் வெற்றி பெற்றார்
பிரான்சிய நாட்டுப் புரட்சியிலே — வீரக்
குருதி சிந்தினர் எம் சோதரர்கள்
இங்கிலாந், ஒல்லாந், மெக்சிக்கோ, ஜப்பான்
வீரரும் சாட்சியம் அளித்தனரே.
விசுவாசத்தோடு அழியாத வெற்றி
ஈழத்து வீரரும் ஈட்டித்தந்தார் — (எங்கள்)

(3) ருஷிய தேசப் புனிதர்குழாம் — எங்கள்
திருமறை வீரம் காட்டிவைத்தார்.
ஸ்பானிய நாட்டின் ரண களத்தில் — வேத
சாட்சிகள் வெற்றிக் கொடிபொறித்தார்
கங்கேரி, சீனா, போலந்து, கேர்ளம்
சிலுவையின் வீரர் உயிர் கொடுத்தார்
அதிகாரத்தோடு அழியாது நின்று,
தழைத் தோங்கும் தாய் வாழ்க. — (எங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

அநியாய மசோதா ஒன்றைக் கொண்டு வந்து திணித்துக் கத்தோலிக்கரர கிய சிறுபான்மையினரை, இலங்கையின் பிரமாணிக்கமுள்ள பிரஜைக ளாகிய எம்மை, நாட்டின் பெருமிகு நேசர்களை வாட்டி வருத்தும் அரசாங்க செயலையிட்டு உங்களது கரங்களில் நின்று சில வார்த்தைகள் பெற விரும்பு கின்றோம்.

பின்வரும் தலையங்கங்களைக் கொண்டதாயும், இருநூறு சொற்களுக்கு மேற் படாததுமான விடயங்கள் அனுப்புங்கள் பார்க்கலாம்.

1. நாங்கள் உங்கள் சதையின் சதை.
2. வருத்துவது ஏனோ.
3. கத்தோலிக்கராயினும், நாட்டுப்பற்று நிறைந்துள்ளோம்.

—(○)—

# இத்தாலிய பட்டணங்களில் இல்லறத்தார் தியானஒடுக்கம் நடாத்துகின்றனர்

அசிசிப்பட்டணத்திலோர் அழகிய மாளிகை. அதன்பெயர்"கோட்டை." கட்டுவிப்பவர் டொன் யோவன்னி ரொஸ்ஸி. தமக்காக அல்ல, "கத்தோலிக்க சனசமூகத்திற்காக."

கட்டிடங்கள் உள்ளும்புறமும் உறுதியும், வனப்பும் வாய்ந்தவை. தற்கால வசதிகள்யாவும் நிறைந்தவை. இதில் வசிப்பவர்கள் இல்லற ஆண், பெண் பாலார். இவர்கள் தங்கள் நாட்டில் வேதப்பணிபுரியத் தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்வதாக வாக்குப்பண்ணி (வாக்குத்தத்தம் அல்ல) யிருக்கிறார்கள். அவர்களிருப்பிடம் "கோட்டை" என அழைக்கப்படுவதுபோல, அவர்கள் தொண்டர் எனப் பெயர்பெறுவர். கல்வியிலும் மேம்பட்டவர்கள் உறுப்பினர் பல்கலைப் பட்டதாரிகளா யிருக்கவேண்டும்.

இவர்களது இயக்கத்தின் இலட்சியம் என்ன? சத்தியத்தையும்,அன்பையும் கருவிகளாகக்கொண்டு தற்கால சமுதாயத்தைக் கிறீஸ்துவின் ஆட்சியில் அமைப்பதையே நோக்கமாகக் கொண்டவர்கள்; பேச்சு, பிரசுரங்கள், கலை, கலாசாரம் உபஊழியர்கள்.

தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கின்றனர் "கோட்டை"யில்உள்ள ஐந்துகுருமார். அகிலத்தோர் ரசிக்கும் சித்திரசங்கீத அழகுக்கலைகளின் மூலமும் கிறீஸ்துவின் இராச்சியமோங்க உழைக்கின்றனர். மாளிகையும், அதன் சுற்றுப்புற நந்தவனமும் கலைப்பொருள்களால் நிரம்பியிருக்கின்றன. தொண்டர்களின் பிரதானஊழியம் இத்தாலியநகர்களில் தியானஒடுக்கப் பிரசங்கங்கள் செய்வதே. இச்சேவையைப்பற்றிச்சிறிது கூறுதும்.

இத்தியான ஒடுக்கங்களை நடாத்துபவர் ஓர் இல்லறத் தொண்டரே. தியானக்கோஷ்டியில் ஒருகுருவும், ஆண்களில் ஒருவரும், பெண்மணிகளில் ஒருவரும் தொண்டுபுரியச் செல்வர். குருவானவர் தலைமைதாங்கிக் குருவுக்குரிய கடமைகள்யாவற்றையும் நிறைவேற்றுவார். ஆயினும், கோயில்களுக்குவெளியே பேசுபவர் தொண்டரேதாம். இவர்கள் சினிமாச்சாலைகளிலும், பட்டணச்சதுக்கங்களிலும், சந்திகளிலும், நடாத்தும் பிரசங்கங்களே தியானஒடுக்கத்தின் பிரதான அம்சங்களாகும்.

இராணுவத்திட்டம்போன்று ஒவ்வோர் தியானஒடுக்கமும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கும். பட்டணத்தைத் தரிசித்து (இருவாரங்களாக) வேதப்பணிநோக்குடன் ஆராய்ச்சி நடத்துவர். தியானஒடுக்கம் அதிகம் தேவைப்படும் பகுதிகளில் அதிக சிரத்தைஎடுப்பர்; எங்கே வேத அனுசரணை அதிகம்குறைவு, ஞான வாழ்வைச் சரியாய் நடத்தாதவர் யார், கலியாணப்பிசகுகள், வைத்திய சாலைகள், கல்விச்சாலைகள் இல்லாக் குறையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

எல்லாம் தயாரானதும் தியான ஒடுக்கக் கோஷ்டியைக் குறித்தபட்டணத்திலுள்ள பங்குக்குருவும், கிறீஸ்துவர்களும் ஊர்வலமாகவரவேற்பர்.

தியானக்கோஷ்டியின் ஏதாவதொரு மண்டபத்தில் காலையும், மாலையும் திட்டப்படி தியானப்பிரசங்கங்கள் செய்வர். நண்பகல்வேளை அவ்விடத்துக் குருமாருடனும், பக்திச்சபைகளுடனும் நிலைமை, தேவைகள்பற்றி ஆராயும்தாய்மார், பையன்கள், பெண்கள், தொழிலாளர், உத்தியோகத்தர்போன்று கூட்டங்கூட்டமாகப் பிரித்துப் பிரசங்கம்நடத்துவர். ஒவ்வொருபேச்சின் இறுதியிலும் குருவானவர் பேச்சின்சாரத்தைக் கூறி முடிப்பர். பிரதானதொண்டு இல்லறத்தொண்டரே செய்வர்.

அதிகபலன்தரும் இன்னொருஊழியத்தைச் செய்பவரும் தொண்டரே. பட்டணத்தின் ஊடாகச்சென்று ஒலிபெருக்கியின் உதவியுடன் சனநடமாட்டம்உள்ள இடங்களில்மாலை வேளை தொண்டர் பேச்சுநிகழ்த்துவர். சதுக்கங்கள், சந்திகளில்நின்று தற்காலச்செய்திகளை ஆதாரமாக வைத்து, மனிதவாழ்க்கை, இலட்சியம்போன்ற விடயங்களைப்பற்றிச் சுருங்கச் சொற்பொழிவாற்றுவர். முதல்வாரத்தில் "கிறிஸ்துவ வாழ்க்கை வழி"யைச் செயலில்காட்டியும், கிறிஸ்துமத சரித்திரத்தை உலகப் பிரபல்யமான சித்திரங்கள்மூலம் விபரித்தும் முடிப்பர்.

இரண்டாம்வார இறுதியில் பொது நன்மை உட்கொள்ளல் நடாத்தப்படும். ஆடவர் பொதுவில் நன்மை உட்கொள்ளுதல் நள்ளிரவுப் பூசை வேளையில்நடக்கும். அவ்வேளை மனைவிமார் சமுகமாயிருப்பதை ஆடவர் விரும்புவதில்லை.

இறுதியில் "தருமப்பலி பூசை" யுடன் தியானம் முடிவுபெறும். அவ்வேளை காணிக்கைநேரத்தில் சனம் பொருளாகவோ, பணமாகவோ தருமம்கொடுப்பர். இத்தருமம் அப் பதியிலுள்ள [illegible] போல் தருமசபையிடம் ஒப்படைக்கப்பெற்று அவ்வூரிலேயே பகிர்ந்து கொடுக்கப்படும். அப்பட்டணம் கிறிஸ்துஇராசாவுக்கு அர்ப்பணஞ் செய்யும் சடங்குடன் தியானம் முடிவடையும்.

இந்தத்தியானக்கோஷ்டிகள் எதிர்பார்ப்பதிலும்பார்க்க அதிகமான நன்மைகள் உண்டாகின்றன எனக் கூறப்படுகிறது. கத்தோலிக்க நாட்டின் நிலைக்கேற்ப இந்தத் தியான ஒடுக்கங்கள் அமைக்கப்படுகின்றன என்பது தெளிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தியையே இலட்சியமாய்க் கொள்ளுவோம்

("சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா" என்ற மெட்டு)

**தொகையரு**

முத்தியையே இலட்சியமாய்க் கொள்ளுவோம்,
முகம்மலர்ந்து, மனம்மகிழ்ந்து செல்லுவோம்

**பல்லவி**

முத்தியையே இலட்சியமாய்க் கொள்ளுவோம்
முகம் மலர்ந்து, மனம்மகிழ்ந்து செல்லுவோம் ஓ ஓ......
கொள்ளுவோம் — செல்லுவோம்.

**சரணம்**

(1) எல்லையில்லா இன்னல் வந்து தடுப்பினும் — என்றும்
எங்களுயிர் வெல்லமென மதிக்கிலோம்.
வல்லபரன் பலம்தந்து அணைந்தாளுவார் — நல்
வழிதன்னில் ஒளியோடு முன்செல்லுவோம் — (முத்தியையே)
(2) கொல்லரவு வாயின் விஷம் குடித்திடோம் — என்றும்
கொலை செய்வோர் தமக்கஞ்சி நடித்திடோம் — நாம்
தொல்லைகளைத் துரும்பென்று புறம் காணுவோம் — நல்
வழிதன்னில் ஒளியோடு முன்செல்லுவோம் (முத்தியையே)
(3) வெண்ணிலவும் பொற்கொடியின் சுடரிலே — எங்கள்
வித்தகராம் பாப்பரசர் நிழலிலே
மண்ணிலவர் மைந்தர்களெம் கடன் செய்குவோம் — நல்
மனம் பொங்கும்திடனோடு முன் செல்லுவோம் (முத்தியையே)
(4) சத்தியத்தின் துவசத்தை நிறுத்துவோம் — என்றும்
சன்மார்க்க நெறிதன்னை உயர்த்துவோம் — எம்
சத்துருவை செபம்கொண்டு ஜெயம் காணுவோம் — நல்
வழிதன்னில் ஒளியோடு முன்செல்லுவோம் — (முத்தியையே)

# கொழும்புத்துறை அர்ச். சூசைமாமுனிவர் ஆசிரிய கலாசாலையில் பாப்பரசர் தினம்

அன்று கார்த்திகை 4-ம் நாள். கணீர் கணீர் என்று மணியோசை ஆர்ப்பரித்தது. கலாசாலை மாணவர் மனதிலும், மாணவிகள் மனதிலும், சிறுர்களின் மனதிலும் மகிழ்ச்சிப் பிரவாகம் அதிகரித்தது. இதன்காரணம்? இன்று கலாசாலையின் மெய்ஞ்ஞான அறிவுக் கழகமானது பாப்பரசரின் முடிசூட்டு தினத்தின் 2-ம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இருக்கின்றது என்பதாகும்.

குறித்த நேரம் அண்மியதும் தூய வெண்ணுடை அணிந்த ஆசிரியகலாசாலை மாணவரும், மாணவிகளும், சாதனைகழக மாணவர்களும், இன்னும் பலரும் விழாமண்டபத்தின் கண்ணே அணியணியாக அமர்ந்திருந்தனர். விழா மண்டபமானது பாப்பரசாது விருதுக்கொடியின் மஞ்சள்—வெள்ளை நிறம் தாங்கிய வர்ணத்தாள்களால் அலங்கரிக்கப்பட்டிருக்க, மண்டபத்தின்கண்ணே உயர்ந்தவோர் மேடையில் விழாநாயகரின் பிரதிமைப்படம் கண்ணைக்கவரக்கூடிய வகையில் அலங்கரிக்கப்பட்ட சிங்காசனத்தில் வைக்கப்பட்டிருக்கவே மண்டபம் கண்கொள்ளாக் காட்சியளித்தது.

மெய்ஞ்ஞானக் கழகத்தின் கௌரவ தலைவர் சங். சகோதரர் டபிள்யு. பசிவிக்குஸ் அவர்களின் தலைமையின் கீழ்; விழாக்கொண்டாட்டம் முற்பகல் 10 மணிபோல் ஆரம்பமானது. கழகத்தின் போஷகரும், தாபனத்தின் தலைவருமான வண. பி. தியோகுப்பிள்ளை அடிகளும், வண. எம். ஜே. மரியாம்பிள்ளை அடிகளும், வண. சி. எஸ். ஐயாத்துரை அடிகளும், கலாசாலை உப அதிபரான சங். தாயார் பீற்றர் அவர்களும், பேராசிரியர்களும், சாதனைகழக ஆசிரியர்களும் சமூகம் தந்து விழாவைச்சிறப்பித்தனர். விழா திருமறை ஓதலுடன் ஆரம்பமானது. பின்னர் கலாசாலைக்கீதம் இசைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து தலைவர் உரை வழங்கப்பட்டது. இவர் தம் தலைமையுரையில் மேற்படி கழகம் இன்று விழாவெடுத்ததன் காரணத்தைத் தெளிவாக விளக்கினர். பின் ஆசிரியமாணவன் திரு. பா. சத்திய சீலன் அவர்கள் "பாப்பரசர்" என்ற தலையங்கத்தின் கீழ் ஓர் அரிய சொற்பெருக்காற்றினர். இவர் தமது பேச்சின்போது "இலங்கைக் கிறிஸ்தவர்களுக்கு இன்னல்மிகுந்த இனிவரும் காலத்தில் தொல்லைகள் பல காத்திருக்கின்றனவெனக் கூறிப் பாப்பரசர் எங்கள் அரசர் என்பதன் அர்த்தம் என்ன? அவர் எப்படி எமக்கு அரசராகிறார், அவருக்கு நாம் எப்படி அமையவேண்டும்" என்பதை அரிய உதாரணங்கள் மூலம் எடுத்துரைத்ததைத்தொடர்ந்து ஆசிரியமாணவர்களால் பாப்பரசரின் புகழ் செறிந்த இன்னிசை மீட்கப்பட்டது. பின் சாதனைகழக மாணவன் செல்வன் யோ. சந்தியோகு சிறந்த சொற்பெருக்காற்றினர். தமது சொற்பெருக்கின்போது "நீ கல்லாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் எனது

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்.

சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், பரிசுத்த பாப்பரசர் 12-ம் பத்திநாதரின் பரிவான வேண்டுதலாலும் எனது கோரிக்கைகளில் ஜெயமடைந்து வருகிறேன். முற்றிலும் வெற்றி கிடைக்க இவர்கள் உதவி புரிவார்களாக. மாதாவே! உம்மை நம்பினேன். 12-ம் பத்திநாதரே, உமது நாமம் புகழப்படுவதாக.

J. B.

* * *

சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், 12-ம் பத்திநாதர் பாப்பரசரின் வேண்டுதலாலும், அர்ச். யூதாததேயுவின் மன்றாட்டாலும் நான் கேட்ட காரியங்கள் கிடைக்கப்பெற்றேன். இதனை நன்றித் தோத்திரமாக பிரசுரிக்கிறேன். அவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுர தாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

J. C.

* * *

பரிசுத்த பாத்திமாமாதாவே, நீர் எனக்குச் செய்த உபகாரத்திற்காக நன்றியறிந்த ஸ்தோத்திரம்.

— மேரிப்பிள்ளை.

# சுதேச வர்த்தமானம்

### கவர்னர்—ஜெனறலுக்குக் கத்தோலிக்கரின் மனு

மினுவாங்கொடைப் பட்டினத்திலே ஆராதனைவழிபாடுநடத்தப் பாவிக்கப்பட்டுவந்ததும், புதியகோவில்ஒன்று கட்டப்படவிருந்ததுமாகிய ஓர் இடத்திலுள்ள காணியையும், கட்டடத்தையும் அரசாங்கம்பலவந்தமாக எடுத்துக்கொண்டதுபற்றி விசாரணைநடத்துமாறு அங்குள்ள சுமார்500கத்தோலிக்கமக்களும் கவர்னர்-ஜெனறலுக்கு ஓர்மனு சமர்ப்பித்திருக்கின்றார்கள். மினுவாங்கொடையிலே தபாற்கந்தோர் கட்டடம்ஒன்றைஅமைக்க அதிகம்தகுதியானஇடங்கள் இருக்கும்போது இந்தக்காணியையும், கட்டடத்தையும் அரசாங்கம்எடுத்துக்கொண்டமை ஓர்அநீதியானசெயலென அந்தமனுவிலே அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

### விலைப்படாத சாறங்கள்

உள்நாட்டிலே உற்பத்திசெய்த 20 இலட்சம்சாறங்கள் விலைப்படாது குடிசைக்கைத்தொழில்பகுதிப் பண்டகசாலைகளிலே கிடக்கின்றன. இவற்றில் 12,000ம்சாறங்கள் கசங்கிக்கறைப்பட்டிருக்கின்றன. இவற்றிலும்4,000 சாறங்கள் முற்றாகவே அணியமுடியாதன. இந்த நாலாயிரமும்போக எஞ்சியஎண்ணாயிரத்தையும், இன்னும் நெசவுத்தொழில் பயிற்சிநிலையங்களில் பயிற்சியாளர் உற்பத்திசெய்த புடவைகளையும் தருமஸ்தாபனங்களுக்கும், கிராமங்களிலுள்ள வழியவர்களுக்கும் இலவசமாக வழங்க ஆயத்தம் நடக்கின்றது.

### பொதுத்தராதர பத்திர பரீட்சை

வருகிறமார்கழிமாதம் நடைபெறவிருக்கும் பொதுத்தராதரப்பத்திரப் பரீட்சை (ஜி. சி. ஈ.) க்கு 1இலட்சத்து 25ஆயிரம் மாணவர், மாணவிகள் சமுகமளிக்க விருக்கின்றார்கள். இப்பரீட்சைக்கு இம்முறை சென்றவருடத்திலும் கூடுதலாகப் பதினாயிரம்பேர் மனுப்பண்ணியிருக்கின்றனர். மார்கழி 6-ந்திகதியன்று பரீட்சை ஆரம்பமாகும். 92நிலையங்களில் பரீட்சை நடந்தேறவிருக்கிறது.

### இளைப்பாறும் வயதுஎல்லை

அரசாங்கம் தற்போதுசெய்துள்ள ஒருபுதியதிட்டப்படி, அரசாங்க ஊழியர்கள்எல்லோரும் 55வயதில் இளைப்பாறவேண்டியவர்கள். இவர்களில் நிரந்தரகாரியதரிசிகளும் அடங்குவார்கள். அரசாங்கஊழியர்களை 55வயதிலே இளைப்பாறச்செய்வதானது அரசாங்கசேவையைச் சீர்ப்படுத்தியமைக்கும் ஒருதிட்டத்தின்பகுதியாகும்.

### தமிழ் ஆசிரியர்களும் சிங்களமும்

அரசினர் தமிழ்ப்பாடசாலைகளிலே கடமையாற்றப் புதிதாகநியமனம் பெறும் தனித்தமிழ்ஆசிரியர்களும் வருங்காலத்திலே அரசாங்கமொழியாகிய சிங்களத்தில் தேர்ச்சிபெறவேண்டுமென்று கல்விப்பகுதி ஒரு புதியநிபந்தனை விதித்துள்ளது. புதிதாகநியமனம்பெறும் தமிழ்ஆசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற்றால் மட்டுமே அவர்களதுநியமனம் நிரந்தரமாக்கப்படும். தனித்தமிழ்ஆசிரியர்களுக்குச் சிங்களநிபந்தனை எதற்கோ தெரியவில்லை.

### லெட்பென்சில் தொழிற்சாலை

லெட்பென்சில் அதாவது ஈயலேகினியை இறக்குமதி செய்வதாலே வருடந்தோறும் இலங்கையிலிருந்து ஏறக்குறைய ஆறுலட்சம்ரூபா பிறநாடுகளுக்குச் செல்லுகின்றது. இலங்கையிலே தற்போது லெட்பென்சிலை உற்பத்திசெய்வதற்கென்று ஒருவர் பெலியகொடையிலே களனியாற்றங்கரையில் ஒருதொழிற்சாலையை அமைத்திருக்கின்றார். இதிலே இரண்டுஇலட்சம் ரூபா பெறுமதியுள்ள யந்திரங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இதிலே லெட்பென்சில் உற்பத்திசெய்தல் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. ஆனால், வருடமுடிவில்தான் விற்பனைக்குவரும். நாள் ஒன்றுக்கு இத்தொழிற்சாலை ஆரம்பத்திலே 350குறோஸ் லெட்பென்சில்செய்யும். தற்போதுஇலங்கையிலே வருடந்தோறும் ஒருஇலட்சம்குறோஸ் லெட்பென்சில் இறக்குமதியாகின்றது.

## பாப்பரசர் தினம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டா'' என்று கூறியதன்மூலம் பாப்பரசரின்கட்டளைக்கு நாம் அமையவேண்டும்; உலகமன்னர்களுக்கு விழா எடுக்கும் நாம் எங்கள் திருச்சபைத் தலைவருடைய மகுடாபிஷேக தினத்தைச் சிறந்த பெருநாளாக வருடாவருடம் கொண்டாடிவரவேண்டும் என வற்புறுத்தினார். அதன்மேல் சாதனகழக மாணவர்களால் இனிய கானம இசைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து சாதனகழகத் தலைமை ஆசிரியர் பண்டிதர் ஏ. யோசவ் அவர்கள் பாப்பரசருக்கும், எமக்கும் இடையேஉள்ள இணைப்பு எப்படியானது என்பதைப் பல அரியஉதாரணங்கள்மூலம் நகைச்சுவையாக எடுத்தியம்பிச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றார். பின்னர் ஆசிரியமாணவி எஸ். றீற்ரு பேசியபோது, நாம் இத்தினத்தை எவ்விதம் கொண்டாடவேண்டும்என்றும், திருச்சபைக்கு இன்னல்கள் நேரும்போது நாம் பாப்பரசரின் பிரசைகள் என்ற மட்டில் அவற்றை எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார். சொற்பொழிவின் இறுதியில் ஆசிரியமாணவிகளால் இனிய கானம் இசைக்கப்பட்டது.

ஈற்றில் விழாவிற்குச் சமுகம்கொடுத்திருந்த யாவருக்கும் செயலாளர் நன்றிகூறவே, பாப்பரசர்கீதம் இசைக்கப்பட்டு, ஈருந்த செபத்துடன் விழா இனிதே நிறைவானது.

—திருபா.

## பாஷையூரில்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

**எங்களுக்குள்ள அடிப்படை உரிமையை அரசாங்கம் பறிப்பதைத் தடைசெய்வதற்கு வேண்டிய முயற்சிகள் யாவையும் கையாடுவோம். அரசாங்கம் எங்கள் எதிர்ப்பிற்குச் செவிமடுக்காமல் கத்தோலிக்க பாடசாலைகளைக் கைப்பற்றினால், எங்கள் பிள்ளைகளை அரசாங்க பாடசாலைகளுக்கு அனுப்பாமல் எங்கள் அடிப்படை உரிமைகளை மீண்டும் பெறும்வரையும் தொடர்ந்து போரடுவோம்.''**

இத்தீர்மானம் கௌரவ பிரதம மந்திரி அவர்கட்கும், மாட்சிமைதங்கிய தேசாதிபதி அவர்கட்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஒருமுறை அடகுவைத்த நிலத்தை மீட்டுக்கொள்ளலாம். ஆனால், ஒருமுறை இழந்துபோன நேர்மையைத் திரும்பவும் பெறமுடியாது."

# அமெரிக்க புதிய ஜனாதிபதி

இம்மாதம் 8-ந்திகதியாகிய நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமெரிக்க புதியஜனாதிபதித்தேர்தலிலே ஜனநாயககட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட செனற்றர்ஜோண் கென்னடிஅவர்கள் அதிகப்படியாகப் பெருந்தொகைவாக்குகளைப்பெற்றுப் புதியஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கிறாரெனச் செய்திகிடைத்திருக்கிறது. அமெரிக்காவின்சரித்திரத்திலே கத்தோலிக்கர்ஒருவர் ஜனாதிபதியாகத் தெரியப்பெற்றிருப்பது இதுவே முதன்முறையாகும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 3052**

பெருமாள் கோவிலடி
வீரச்செட்டி வேலாயுதம் —வழக்காளி.
எதிராக
நம். 57, நாவாந்துறை றோட்
சேகு சுல்தான் அப்துல்காதர்
சத்த்கத்துல்லா

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3052-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் 1961-ம் ஆண்டு தைமாதம் 25-ந்திகதி புதன்கிழமை (25-1-61) பிற்பகல் 2மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

**தீர்வைத் தொகை**

ரூபா 2,697-50-க்கு இன்னும் ரூபா 2,697-50-க்கும் 23-9-59தொடக்கம், தீர்வைத்திகதி 4-12-59 வரைக்கும் 18% வட்டியும், அதன்பின் கூடியமுழுத் தொகைக்கு 5%வட்டியும் கொடுக்கும்வரை இறுக்கவேண்டும். கோட்டுச்செலவு ரூபா 290 சதம் 50.

**காணி விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் எழுதுமட்டுவாள் கோயிற்பற்று, எழுதுமட்டுவாள் இறை "கொல்பிட்டி பனை'' எனும்காணி நில. பர. 112-உள் தென்னைகளும், மற்றும் பயிர்வகைசெய்யும் நிலம். எல்லை: கிழக்கு— சின்னத்தம்பி கதிர்காமருக்கும், சட்டநாதருக்கும், சுப்பர் நடராசாவுக்கும் உரியஆதனம். வடக்கும், மேற்கும் — காலஞ்சென்ற சேர் அம்பலவாணர் கனகசபையின் உரித்தாளிக்குரிய ஆதனம். தெற்கு — விநாசித்தம்பி கந்தையாவிற்கு உரியஆதனம். இது அடங்கலும். பதிவுஇலக்கம் F 307/220.

**இ. கனகரத்தினம்**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறைறோட்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

## ORDER NISI
### DECLARING WILL PROVED

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Last Will and Testament of the late Mary Sinnachchy wife of Samuel Paul of Tellipalai East, Jaffna.
Deceased.

Testamentary Jurisdiction } No. 863.

Samuel Paul of Tellipalai East, Jaffna.
Petitioner.

Vs.

Samuel Vethanayagam Paul of Tellipalai East, Jaffna.
Respondent.

This matter coming on for disposal before P. Sri Skanda Rajah Esquire, District Judge, Jaffna on the 29th day of August 1960 in the presence of Mr. M. M. Sultan, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 3rd June 1960 and the affidavit of the witnesses to the Last Will dated 13th June 1960 respectively having been read: It is ordered that the Last Will and Testament of the abovenamed deceased dated the 22nd day of August 1956 and attested by M. M. Sultan, Notary Public under No. 2920 be declared proved and that the Petitioner be declared entitled to have Probate of the Last Will and Testament of the abovenamed deceased as Executor and sole legatee in terms of the said Last Will and directing that such probate be issued to the Petitioner accordingly unless the Respondent or any other person or persons interested shall appear before this Court on the 24th day of October 1960 and state objection or show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 29th day of August 1960.
Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge, Jaffna.

Extended for 14-11-60.
Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge, Jaffna.

## கிறீஸ்துஇராசாவின் திருநாள்

**வலைப்பாடு**

27-10-60வியாழக்கிழமை பொழுதுசாய்வதுகாரணமாக நீலவானம் பலவர்ணசாலங்களுடன் காட்சியளித்தது. மங்கிவரும் கதிரவனைக்கண்டு பொங்கியெழுந்தது பூரணசந்திரன். சந்தானுள் ஆலயத்திலே கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூபம் அழகிய டெய்சிப்புஷ்பங்களால் அலங்கரித்துத் தீபலங்காரம் செய்திருந்த பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மணிகள்ஆர்ப்பரிக்க, மக்கள் ஆலயத்தைநோக்கிச்சரிந்தனர்.

நோவனைகள் செபமாலையுடன் ஆரம்பமாயின. பாடசாலைமாணவிகளால் கீதங்கள் இனிமையாகப் படிக்கப்பட்டன. வண. எச். மோறோ சுவாமியவர்கள் ஆசீர்வாதம்அருளினார். 29-ந்திகதி சனிக்கிழமைமாலை வேஸ்பர்பாடி ஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாளாகிய 30-10-60ஞாயிறுவாரம்காலை மணிகள்இசைக்க, மக்கள் திரளாகச் சமுகமளிக்கக்குரவர் அவர்கள் திருநாட்பாடற்பூசையை ஆரம்பித்து, "கிறீஸ்துஇராசாவே உம்முடையஇராச்சியம் வருக'' என்று தொடக்கி ஓர்அரிய பிரசங்கம்செய்தார். பூசைமுடிந்ததும் கிறீஸ்துஇராசாவின் திருச்சுரூபத்தை அழகியபுஷ்பங்களால் அலங்கரித்துப் பாடகர்குழாம் இனியகீதங்கள்படிக்கச் சுற்றுப்பிரகாரம் பக்தியருட்சியாக நடந்தேறியது.

அன்றுபிற்பகல் ஆசிரியர்களும், ஆசிரியைகளும், பெற்றோரும், பிள்ளைகளும் விளையாட்டுமைதானத்தில் திரளாகச்சமுகமாயிருக்க வண. கட்டளைக்குரவர் கொடியேற்றிவைத்தார். பின்னர்விளையாட்டுக்கள் ஆரம்பமாயின. விளையாட்டுப்போட்டியில் சைக்கில்ஓட்டமும், ஒன்றரைமைல் தூரநீந்தலும் முக்கியஇடம்பெற்றன. நீந்தல்போட்டியில் ஒன்றரைமைலையும் திரு. தேவசகாயம் சிந்தாத்துரை 20 நிமிஷங்களில்நீந்தி முதலிடம்பெற்றுக் கரையேறியபோது திரு. இ. எஸ்தாக்கியால் மாலைசூட்டப்பெற்றார். பத்துமைல்சைக்கில்ஓட்டப்போட்டியில் திரு. இ. சைமன் முதலிடம்பெற்றபோது எல்லோராலும் பாராட்டப்பெற்றார். விவாகமானோர் விவாகமாகாதோரிடையே நடந்த கயிறுஇழுவைப் போட்டியில் விவாகமானோர் வெற்றிபெற்றனர். போட்டி மேற்பார்வையாளராக ஆசிரியர்கள் வி எஸ். ஜேம்ஸ், பி. பெனடிக்ற் உதவிபுரிந்தனர். போட்டிகளினால் உண்டாகும் நன்மையையும், அதனால் மக்களிடையே ஏற்படும் ஒற்று

[தொடர்ச்சி 3-பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

# பொது ஒழுங்குகள்

**1. பெயர் :**

இச்சங்கம் "யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்" எனப் பெயர்பெறும்.

**2. நோக்கம் :**

(அ) கத்தோலிக்கஆசிரியர் தங்கள்அந்தஸ்துக்கேற்ற பூரண கிறிஸ்துவ சீவியத்தை அனுட்டிக்க உதவிசெய்தல்.

(ஆ) ஆசிரியத்தொழில் சம்பந்தமான அறிவை வளர்க்க உதவிசெய்தல்.

(இ) கத்தோலிக்க ஆசிரியர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாத்தல்.

(ஈ) கத்தோலிக்கசேவை, சமூகசேவை முதலாந் துறைகளில் முன்னின்று உழைத்தல்.

(உ) ஆசிரியர்களிடையே ஒற்றுமையையும், கிறிஸ்துவ சகோதர மனப்பான்மையையும் வளர்த்தல்.

(ஊ) ஆசிரியர்களது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்தல்.

**3. வழிவகைகள் :**

சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றப் பின்வரும் வழிவகைகள் கையாளப்படலாம்.

i. ஆசிரியர்களுக்கென வருடாந்த ஞானொடுக்கம் ஒழுங்குசெய்தல்.

ii. வேதசாஸ்திரக் கழகங்கள் நடாத்துதல்.

iii. கத்தோலிக்க பிரசுரங்களை ஆதரித்துப் பரப்புதல்.

iv. மேற்றிராசனத்தால் நடாத்தப்படும் சமூகசேவைத் தாபனங்களுக்கும், சபைகளுக்கும் உதவிபுரிதல்.

v. மேற்றிராணியாரால் குறிக்கப்படும் முயற்சிகளில் ஈடுபடுதல்.

vi. கத்தோலிக்க திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

**4. அங்கத்துவம் :**

(அ) யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் ஆசிரிய கடமையாற்றும் துறவிகளல்லாத ஆண், பெண் இருபாலாரும் இச்சங்கத்தில் அங்கத்துவம் பெறுவர்.

(ஆ) தாங்கள் சேவைசெய்யும் வட்டாரத்தில் உள்ள கிளைச்சங்க நிருவாக சபைக்கு விண்ணப்பித்து, பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

**5. பாதுகாவலர் :**

அர்ச். டே லா சால் அருளப்பரை இச்சங்கம் தனது பரலோக பாதுகாவலராகத் தெரிந்துகொள்ளுகின்றது.

**6. பரிபாலகர் :**

மகாவந்தனைக்குரிய யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவர் அவர்களே சங்கத்தின் பரிபாலகர் ஆவர்.

**7. ஞானவழிகாட்டி :**

மகாவந்தனைக்குரிய மேற்றிராணி ஆண்டவர் பொதுச்சங்கத்துக்கும், ஒவ்வொரு கிளைச்சங்கத்துக்கும் ஒவ்வொரு குருவானவரை ஞான வழிகாட்டியாக நியமிப்பர்.

**8. கிளைச்சங்கங்கள் :**

(அ) i. யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுகளும்.

ii. மன்னார்ப்பகுதி.

iii. வவுனியா — முல்லைத்தீவு (கிளிநொச்சி அனுராதபுரம் உட்பட) ஆகிய மூன்று வட்டாரங்களில் கிளைச்சங்கங்கள் அமைக்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு கிளைச்சங்கமும், பொதுச்சங்கத்தின் பெயரை முன்னதாகவும், இடப்பெயரைப் பின்னதாகவும் கொண்டிருக்கும்.

(உதாரணம்: யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்—யாழ்ப்பாணக்கிளை, மன்னார்க்கிளை, வவுனியாக் கிளை.)

**9. விசாரணைப்பங்குச் சபைகள் :**

(அ) ஒவ்வொரு கிளைச்சங்கமும் பல விசாரணைப்பங்குச் சபைகளை அடக்கியுள்ளதாயிருக்கும். இச்சபைகளில் அவ்வப்பங்கில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அங்கத்துவம் பெறுவர்.

(ஆ) விசாரணைப்பங்குச் சபைகளுக்கு அவ்வவ் விசாரணைப் பங்கிலுள்ள குருவானவரே ஞான வழிகாட்டியாவார்.

(இ) இச்சபைகள் கிளைச்சங்கத்தின் அதிகாரத்தின்கீழ் அவ்வவ் விசாரணைப்பங்கின் நலனைக்கருதித் தலைவர், உபதலைவர், காரியதரிசி—தனாதிகாரி ஆகிய மூவரைநியமித்துச் செயலாற்றும்.

(ஈ) உத்தியோகஸ்தர்கள் மூவருடன் 2 நியமன அங்கத்தவர்கள் சேர்ந்து நிருவாகசபையினராவர். இவர்கள் மாதம் ஒருமுறை கூடுவர். விசாரணைப்பங்குக் குருவானவருடனும், கிளைச்சங்க நிருவாகசபையின் செயல்திட்டத்துடனும் ஒத்துழைப்பர்.

**10. கிளைச்சங்க நிருவாகசபை :**

(அ) தலைவர், இரண்டு உபதலைவர்கள் (ஓர் ஆண், ஒரு பெண்), இணைக் காரியதரிசிகள் (ஓர் ஆண், ஒரு பெண்), தனாதிகாரி ஆகிய ஆறு உத்தியோகத்தரும், தெரிவுசெய்யப்பெற்ற வேறு 7 அங்கத்தவர்களும் (3 பெண்கள் உட்பட) நிருவாக சபையினராவர். (7 பேருக்குக் குறையாதோர் சமுகமளிப்பின் நிருவாகசபை அதிகாரமுள்ளதாகும்).

(ஆ) நிருவாகசபை ஒரு மாதத்துக்கு ஒருமுறை கூட்டப்படவேண்டும்.

(இ) கிளைச்சங்க நிருவாகசபை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை பொதுச்சங்க நிருவாகசபைக்குத் தனது செயல்திட்டத்தைப் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்

(ஈ) கிளைச்சங்க நிருவாகசபை, பொதுச்சங்க நிருவாகசபையால் சிபார்சுசெய்யப்பெற்ற செயல்திட்டங்களை அமுல்நடத்தவேண்டும்.

**11. பொதுச்சங்க நிருவாகசபை :**

i. ஒவ்வொரு கிளைச்சங்க நிருவாகசபையும், முதற்கூட்டத்திலேயே அங்கத்தவருள் ஏழுபேரை (உத்தியோகத்தர் உட்பட) பொதுச்சங்க நிருவாகசபையின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யும். இணைக்காரியதரிசிகள் இவர்களின் பெயர்களைத் தாமதமின்றிப் பொதுச்சங்கத் தலைவருக்குத் தெரிவிப்பர். புதிய நிருவாகசபை அங்கத்தவர்கள், பொதுச்சங்கத் தலைவரால் மாசி மாதத்தில் ஒன்றாகக் கூட்டப்பட்டு தம்முள் ஒரு தலைவர், இரு உபதலைவர்கள் (ஓர் ஆண், ஒரு பெண்), ஒரு காரியதரிசி, உபகாரியதரிசி, ஒரு தனாதிகாரி என்பவர்களைத் தெரிவுசெய்வர். இக்கூட்டத்தில் பழைய காரியதரிசி சங்கத்தின் வருடாந்த பொது அறிக்கையையும், பழைய தனாதிகாரி பொதுநிதி அறிக்கையையும் சமர்ப்பிப்பர். (ஒன்பதுபேருக்குக் குறையாதோர் சமுகமளிப்பின் நிருவாகசபை அதிகாரமுடையதாகும்.)

ii. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது பொதுநிருவாகசபை கூட்டப்படவேண்டும்.

iii. இச்சபை கிளைச்சங்கங்கள் சமர்ப்பிக்கும் செயல்திட்டங்களை ஆராய்ந்து தகுந்த ஆலோசனையும், உதவியுமளிக்கும்.

**12. கிளைச்சங்கக் கூட்டம் :**

i. வருடந்தோறும் தைமாதத்தில் கிளைச்சங்கப் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் நிருவாகசபையினர் தெரிவு செய்யப்படுவர்.

ii. அங்கத்தவர்களில் 20 பேருக்குக் குறையாதோர் எழுத்துமூலம் கிளைச்சங்கத்தைக் கூட்டும்படி இணைக்காரியதரிசிகளுக்கு விண்ணப்பித்தால் கிளைச்சங்கம் கூட்டப்படும்.

iii. வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் பொது அறிக்கை, நிதி அறிக்கை என்பனவின் பிரதிகள் பொதுச்சங்க நிருவாகசபைக்குத் தாமதமின்றி அனுப்பப்படல்வேண்டும்.

**13. பொதுச்சங்கக் கூட்டம் :**

i. வருடத்தில் ஒருமுறை எல்லாக் கிளைச்சங்கங்களின் அங்கத்தவர்களும் ஒன்றாகக் கூட்டப்பட்டு பொதுச்சங்கம் நடைபெறும். பொதுச்சங்க நிருவாகசபையினர் இக்கூட்டத்துக்கு ஒழுங்குகள் செய்வர். இக்கூட்டத்தில் கடந்தவருடத்தின் நிகழ்ச்சி அறிக்கையும், நிதி அக்றிகையும் சமர்ப்பிக்கப்பெற்று அங்கீகரிக்கப்படும்

ii. தேவை ஏற்படும்போது அல்லது ஒவ்வொரு கிளைச்சங்கங்களிலுமிருந்து 20 பேருக்குக் குறையாதோர் பொதுச்சங்கத்தைக் கூட்டும்படி பொதுக்காரியதரிசிக்கு விண்ணப்பித்தால் பொதுச் சங்கம் கூட்டப்படும்.

**14. சங்கச் செலவுகள் :**

i. சங்கநடாத்துகைச் செலவுகளுக்கு அங்கத்தவர்களிடம் வருடந்தோறும் ஒரு ரூபா நன்கொடை கோரப்படும்.

ii. கிளைச்சங்கங்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட உதவிப்பணத்தின் மூன்றில் ஒருபகுதியைப் பொதுச்சங்கச் செலவுகளுக்காகப் பொதுச்சங்கத் தனாதிகாரியிடம் ஒப்படைக்கவேண்டும்.

**15. ஒழுங்குகளை மாற்றுதல் :**

இவ்வொழுங்குகளில் எவ்வித மாற்றத்தைச் செய்வதற்கோ, புது ஒழுங்குகளைச் சேர்ப்பதற்கோ, பொதுச்சங்கத்தின் மூன்றில் இரண்டு பகுதி வாக்காளரின் சம்மதமும், பரிபாலகரின் அங்கீகாரமும் அவசியமாகும்.

**ஜே. ரேமான்,**
பொதுத்தலைவர்.

**அ. சின்னப்பு,**
பொதுக்காரியதரிசி.

5-11-60

---

### அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை

# முகத்துவார மக்கள் எதிர்க்கின்றனர்

**முகத்துவாரம் டி லா சால் கல்லூரி, அர்ச். அந்தோனியார் பெண்பாடசாலை, சென் யேம்ஸ் சிங்கள கலவன் பாடசாலை ஆகிய இவற்றில் பயிலும் கத்தோலிக்க பிள்ளைகளின் பெற்றோர்** அரசினர் பாடசாலைகளை எடுப்பதை எதிர்க்குமுகமாக, முகத்துவாரம் மேரி மாகிறேற் ஞாபகார்த்த மண்டபத்தில் நூற்றுக்கணக்காகக் கூடினர். கூட்டத்திற்கு அதிவண. வேபியன் பெர்னாண்டோ சுவாமியவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்தில் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் நியாயமற்ற சட்டங்களை எதிர்ப்பதெனவும், **பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாது விடுவதாகவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.** பெற்றோருடைய உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் தம்மாலான சகல உதவிகளையும் செய்வதாக அங்கு சமுகமளித்த ஆசிரியர்கள் உறுதியளித்தனர்.

---

### பாஷையூரில்

# பெருங்கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், பாஷையூர் விசாரணைப்பங்கைச்சேர்ந்த பெற்றோரும், கிறிஸ்தவர்களும் சென்றஞாயிறுவாரம் பிற்பகல் 5 மணிக்குக் கோவிலின் முன்றிலில், அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளை அபகரிப்பதை ஆட்சேபிக்குமுகமாகப் பெருந்திரளாகக் கூடினர். விசாரணைப்பங்கைச் சேர்ந்த பல பெற்றோரும், கிறிஸ்தவர்களும் அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளை எடுப்பதை எதிர்த்துப் பேசினார்கள். கூட்டத்தின் இறுதியில் பின்வரும் பிரேரணை சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது: **"யாழ்ப்பாணம், பாஷையூர் விசாரணைப்பங்கைச்சேர்ந்த பெற்றோரும், கிறிஸ்தவர்களுமாகிய நாம் அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளை எடுக்கச் செய்திருக்கும் தீர்மானத்தை ஏகமனதாக எதிர்க்கின்றோம். கத்தோலிக்க பாடசாலைகளில் எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க**

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 10-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org